# திருக்கோயில்




அக்டோபர்
2002

விலை
ரூ 7.00





திருநாகேஸ்வரம் அருள்மிகு நாகநாத சுவாமி திருக்கோயிலில் அன்னதானத் திட்டம் செயற்படுவதை இந்து சமய அறநிலையத்துறை கூடுதல் ஆணையாளர் திருமிகு எஸ். கனகய்யா பிஎஸ்.சி.பிஎல். அவர்கள் 6-9-2002 அன்று ஆய்வு செய்தார்கள்.



# திருக்கோயில்

திங்கள் இதழ்




| | |
|---|---|
| தனி இதழ் | : ரூ. 7.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : ரூ. 75.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : ரூ. 1000.00 |

| | | | |
|---|---|---|---|
| மாலை 44 | திருவள்ளுவர் ஆண்டு 2033 | சித்ரபானு - ஐப்பசி அக்டோபர் 2002 | மணி 10 |



சிறப்பாசிரியர்

**திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர், இ.ஆ.ப.**

சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

ஆசிரியர்

*முனைவர் த. அமிர்தலிங்கம்,*

*எம்.ஏ., பி.எச்.டி.*

''திருக்கோயில்'' நிர்வாகக் குழுவினர்

**திருமிகு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.**

கூடுதல் ஆணையாளர்

**திருமிகு ப. இராஜா, பி.எஸ்சி., பி.எல்.**

இணை ஆணையாளர், தலைமை இடம்

**திருமிகு ஆ. குப்புசாமி, பி.ஏ. பி.எல்.**

ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

**திருமிகு கே.கே. இராஜா, எம்.ஏ., பி.எல்.**

இணை ஆணையாளர் - செயல் அலுவலர்

அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி

திருக்கோயில், பழநி.


முகப்பு

**திருப்பாம்புரம் அருள்மிகு வண்டார்குழலி அம்மன்**

**உடனுறை அருள்மிகு சேடபுரீசுவரர்**

## பொருளடக்கம்


**பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் முதல் மேலும் 18 திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம்**
- மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்

**மழை பொழிவிக்கும் வள்ளல் திருப்பதிகங்கள்**
- முனைவர் த. அமிர்தலிங்கம்

**நியாயங்கள் தடுமாறுவதில்லை**
- கலைமாமணி மா. இலட்சுமணன்

**''திருபாம்புரம்'' — தலவரலாறு**

**''திருப்பாம்புரம்'' — திருக்குட நீராட்டுவிழா — ஓர் கண்ணோட்டம்**
- டாக்டர் கயிலை சிவபார்வதி எம்.ஏ., பிஎச்.டி.

**ஸ்ரீ காஞ்சி காமாட்சி** - திருமதி இராஜேஸ்வரி விசுவநாதன்

**மாங்காடு ஸ்ரீகாமாட்சி** - திருமதி உமாசுப்பிரமணியன்

**காரைக்கால் அம்மையாரின் புனிதப் பயணம்**
- அருள்நிதி மணிமாறன்

**தியான அனுபவம்** - கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

**சிவப் பரம்பொருளின் வடிவங்கள்** - டாக்டர் சிவப்பிரியா



*உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :*

உயர்திரு ஆணையாளர் அவர்கள்

***திருக்கோயில்***

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை

*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

தொலைபேசி : *8279407*

# பேறறிஞர் அண்ணா பிறந்தநாள் முதல் மேலும் 18 திருக்கோவில்களில் அன்னதானத் திட்டம்

**- மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள்**

### இலவச மதிய உணவு

தமிழக சட்டமன்ற பேரவையில் 9.3.2002 அன்று ஆளுநர் உரையில் தமிழ்நாட்டில் தெரிந்தெடுக்கப்பட்ட திருக்கோவில்களில் நன்கொடையாளர்கள் பங்கேற்புடன் பக்தர்களுக்கு மதிய உணவு வழங்கும் ''அன்னதானத் திட்டம்'' என்ற புதிய திட்டம் தொடங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து சென்னை மயிலாப்பூரில் உள்ள கபாலீஸ்வரர் திருக்கோவிலில் 23.3.2002 சனிக்கிழமை அன்று பகல் 12.15 மணி அளவில் பக்தர்களுக்கு இலவசமாக மதிய உணவு வழங்கும் ''அன்னதானத் திட்டம்'' என்ற புதிய திட்டத்தினை நான் தொடங்கி வைத்தேன். இந்த திட்டத்தின்படி, நாள்தோறும் இந்த திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு மதிய உணவு இலவசமாக வழங்கப்படுகிறது.

### 126 கோவில்கள்

முதற்கட்டமாக தமிழ்நாட்டில் பல்வேறு ஊர்களில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட 63 திருக்கோவில்களில் என்னுடைய அமைச்சரவை சகாக்கள் இத்திட்டத்தை 23.3.2002 சனிக்கிழமை அன்று தொடங்கி வைத்தார்கள். இந்தத் திட்டத்தை அமுல்படுத்த தேவைப்படும் நிதி நன்கொடையாளர்களிடமிருந்து திரட்டப்படுகிறது. இந்த திட்டத்திற்கு அமோக வரவேற்பு கிடைத்துள்ளது. எனவே, இத்திட்டத்தினைத் தமிழ்நாட்டிலுள்ள மற்ற திருக்கோவில்களிலும் செயல்படுத்த வேண்டும் என கோரிக்கைகள் பல வந்த வண்ணம் உள்ளன.

இரண்டாவது கட்டமாக மேலும் 63 திருக்கோவில்களில் 15.8.2002 (வியாழக்கிழமை) அன்று முதல் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. தொடர்ந்து இந்த அன்னதானத் திட்டத்திற்கு அமோக வரவேற்பு கிடைத்து வருகிறது. மேலும் பல திருக்கோவில்களில் இந்தத் திட்டத்தினை ஆரம்பிக்க வேண்டும் என்று வேண்டுகோள்கள் வந்தவண்ணம் உள்ளன.

மேலும், மேதகு தமிழக ஆளுநர் உரையில், இத்தகைய கோவில்கள் அனைத்திலும் குழந்தைகளுக்கு ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறியைப் போதிப்பதற்காக ஞாயிறு தோறும் குறைந்தது ஒரு மணி நேரம் வகுப்புகள் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இதன் தொடர்ச்சியாக, ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறியை போதிப்பதற்காக முதற் கட்டமாக, தமிழ்நாட்டில் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்ற 63 திருக்கோவில்களில், 24.3.2002 ஞாயிற்றுக் கிழமை அன்று வகுப்புகளும் துவக்கி வைக்கப்படும் என்றும் தெரிவித்து இருந்தேன். அவ்வாறு இந்த வகுப்புகள் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலை 3 மணி முதல் 4 மணி வரையிலோ, அல்லது 4 மணி முதல் 5 மணி வரையிலோ நடத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆன்மீகப் பயிற்சி வகுப்புகளை உள்ளூர் பள்ளி ஆசிரியர்கள், கல்லூரி ஆசிரியர்கள் மற்றும் சமயச் சொற்பொழிவாளர்கள் நடத்துகிறார்கள். இரண்டாவது கட்டமாக, அன்னதானத் திட்டம் செயல் படுத்தப்பட்டு வரும் மேலும் 63 திருக்கோவில்களில் ஆன்மீகம் மற்றும் ஒழுக்க நெறியை ஞாயிறு தோறும் குழந்தைகளுக்கு குறைந்தது ஒரு மணி நேரம் வகுப்புகள் மாலை 3 மணி முதல் 4 மணி வரையிலோ அல்லது 4 மணி முதல் 5 மணி வரையிலும் நடத்தப்படுகிறது.

### 3-வது கட்டமாக 18 கோவில்கள்

எனவே, மூன்றாவது கட்டமாக, பேரறிஞர் பெருந்தகை அண்ணா பிறந்தநாளான இன்று முதல் தமிழகத்தில் மேலும் 18 திருக் கோவில்களில் அன்னதானத் திட்டம் தொடங்கப்படும்.

இத்துடன் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்படும் திருக்கோவில்களின் மொத்த எண்ணிக்கை 144-ஆக உயருகிறது. இதற்காக நிதி அளிக்க விரும்புவோர் அந்தத் திருக்கோவில்களில் வைக்கப்பட்டிருக்கும் தனியான உண்டியல்களில் செலுத்தலாம்.

### பொது மக்கள் பங்கு

தவிர, இந்த அன்னதானத் திட்டத்திற்கு உதவிட விரும்புவோர், தாங்கள் விரும்பும் திருக்

கோவிலுக்கு தலா ரூ. 15 ஆயிரம் செலுத்தி கட்டளை களை ஏற்படுத்தலாம். அந்தக் கட்டளைகளிலிருந்து பெறப்படும் வட்டி வருமானத்தில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் கட்டளைதாரர் விரும்பும் நாளன்று குறைந்த பட்சம் 120 நபர்களுக்கு அன்னதானம் செய்ய அந்தந்த திருக்கோவில் மூலம் ஏற்பாடு செய்யப்படும்.

எனவே, தமிழகத் திருக்கோவில்களில் அன்ன தானக் கட்டளைகளை ஏற்படுத்த பொதுமக்கள் பெரும் எண்ணிக்கையில் முன்வருமாறு கேட்டுக் கொள் கிறேன்.

## நெறி வகுப்பு

மூன்றாவது கட்டமாக அன்னதானத் திட்டம் ஆரம்பிக்கப்படும் 18 திருக்கோவில்களிலும் ஆன் மீகம் மற்றும் ஒழுக்கநெறி போதிப்பதற்காக ஞாயிறு தோறும் ஒரு மணி நேரம் மாலை 3 மணி 4 மணி வரையிலோ அல்லது மாலை 4 மணி முதல் 5 மணி வரையிலோ வகுப்புகள் நடத்தப்படும்.

தமிழக அரசு அமல்படுத்தும் இந்தத் திட்டங் களை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள தமிழக மக்களை கேட்டுக் கொள்கிறேன்.

3-வது கட்டமாக அன்னதான திட்டம் அமல் படுத்தப்படும் 18 கோவில்கள் விவரம் வருமாறு:-

சென்னை - காளிகாம்பாள் திருக்கோவில்

திருவள்ளூர் - அருள்மிகு வேதபுரீசுவரர் திருக் கோவில், திருவேற்காடு.

காஞ்சிபுரம் - அருள்மிகு சுந்தரேஸ்வரர் திருக்கோவில் (கோவூர்).

நாமக்கல் - அருள்மிகு கைலாசநாதர் திருக் கோவில் (திருச்செங்கோடு நகர்), அருள் மிகு அர்த்த நாரீஸ்வரர் திருக்கோவில் (திருச்செங்கோடு).

கோவை - அருள்மிகு வெள்ளியங்கிரி ஆண்டவர் திருக்கோவில் (பூண்டி), அருள்மிகு அமணலிங்கே சுவரர் திருக்கோவில், (திரு மூர்த்திமலை - உடுமலை).

ஈரோடு - அருள்மிகு வேலாயுதசுவாமி திருக் கோவில் (திண்டல்மலை).

திருச்சி - அருள்மிகு புண்டரிகாட்சப் பெருமாள் திருக்கோவில் (திருவெள்ளறை), அருள்மிகு அரங்க நாதர் அரங்கநாதர் சுவாமி திருக்கோவில் (ஸ்ரீரங்கம்).

**தானத்தில் சிறந்தது**
**அன்னதானம்**

**பசித்தோர்**
**முகம் பார்**

**—பட்டினத்தடிகள்**

## கரூர் மாரியம்மன் கோவில்

கரூர் - அருள்மிகு மாரியம்மன் திருக்கோவில் (கரூர் நகர் மற்றும் வட்டம்).

நாகப்பட்டினம் - அருள்மிகு சுவேதாரண்யேஸ் வர் திருக்கோவில் (திருக்கோவில் (திருவெண்காடு).

கடலூர் - அருள்மிகு வீர ஆஞ்சநேயர் திருக் கோயில்.

சிவகங்கை - அருள்மிகு முத்துமாரியம்மன் திருக்கோவில் (தாயமங்கலம்).

மதுரை - தல்லாகுளம், அருள்மிகு பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோவில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோவில் (அழகர் கோவில்).

## குறிஞ்சியாண்டவர் கோவில்

திண்டுக்கல் - அருள்மிகு குறிஞ்சியாண்டவர் திருக்கோவில் (கொடைக்கானல்) அருள்மிகு தண்டாயுத பாணி சுவாமி திருக்கோவில் (பழனி), அருள்மிகு குழந்தை வேலப்பர் திருக்கோவில், (ஒட்டன்சத்திரம்).

திருநெல்வேலி - அருள்மிகு திருமலை குமாரசாமி திருக்கோவில் (பண்பொழி), அருள்மிகு பால்வண்ணநாத சுவாமி திருக்கோவில் (கரிவலம் வந்தநல்லூர்), அருள்மிகு சங்கரநாராயண சுவாமி திருக்கோவில் (சங்கரன் கோவில்)

தூத்துக்குடி - அருள்மிகு சிவக்கொழுந்தீஸ் வரர் திருக்கோவில் (திருச்செந்தூர்), அருள்மிகு சுப்பிர மணிய சுவாமி திருக்கோவில் (திருச்செந்தூர்).

***

# மழை பொழிவிக்கும் வள்ளல் திருப்பதிகங்கள்

- முனைவர் த. அமிர்தலிங்கம்

''நீரின்றி அமையாது உலகு'' என வான் மழையின் சிறப்பு வள்ளுவப் பெருந்தகையால் திருக்குறளில் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது.

பருவமழை, காலத்தில் பெய்யாமல் பொய்த்துப்போய் மக்கள் மிக வாட்டமுற வாட நேர்ந்த காலங்களில் நம் அருளாளர் பெருமக்கள் திருமுறைப் பாடல்களைப் பாடி அருளியும், திவ்விய பிரபந்தங்களினைப் பாடியருளியும், வான் மழையைப் பெய்வித்து, இவ் வையத்தினை வாழ வைத்துள்ள அருள் செயல்கள், நம் சமய இலக்கியங்களில் கூறப் பட்டுள்ளன.

சுந்தரமூர்த்தி நாயனார் தாம் அருளியுள்ள ஏழாம் திருமுறையில் -

''வையகம் முற்றும் மாமழை மறந்து
வயலில் நீரிலை மாநிலம் தருகோம்
உய்யக் கொள்க மற்றெங்களை என்ன
ஒளிகொள் வெண்முகிலாய்ப் பரந்தெங்கும்
பெய்யுமா மழைப் பெருவெள்ளம்''

எனத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பருவமழை காலந்தாழ்த்தும் காலங்களில் திருஞானசம்பந்தர் மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் பாடியுள்ள ஏழு திருப்பதிகங்களைப் பாடப் பருவ மழை உடன் பொழியத் தொடங்கிவிடும் என்று நம் சான்றோர்கள் உணர்த்தியுள்ளார்கள். மேகராகக் குறிஞ்சிப் பண்ணில் திருஞானசம்பந்தர் அருளியுள்ள அவ்வேழு திருப்பதிகங்களும் ''மழை பொழிவிக்கும் வள்ளல் திருப்பதிகங்கள்'' எனவே வழங்கப் பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

திருஞானசம்பந்தர் அருளியுள்ள மேக ராகக் குறிஞ்சிப் பண்ணில் அமைந்துள்ள -

1. ''சேவுயருந் திண்கொடியான் திருவடியே சரண்'' எனத் தொடங்கும் திருக்கழுமலத் திருப்பதிகம்
2. ''புலனைந்தும் பொறிகலங்கி'' எனத் தொடங்கும் திருவையாறு திருப்பதிகம்
3. ''மெய்த்தாறு சுவையும்'' எனத் தொடங்கும் திருமுதுகுன்றம் திருப்பதிகம்
4. ''ஏரிசையும் வடவாலின் கீழிருந்து'' எனத் தொடங்கும் திருவீழிமிழலை திருப்பதிகம்
5. ''வெந்த வெண் பொடிப்பூசு மார்பின்'' எனத் தொடங்கும் திருக்கச்சி ஏகம்பம் திருப்பதிகம்
6. ''கருத்தன் கடவுள் கனலேந்தி'' எனத் தொடங்கும் திருப்பறியலூர் வீரட்டம் திருப்பதிகம்.
7. ''நீறுசேர்வதோர் மேனியர்'' எனத் தொடங்கும் திருப்பராய்த்துறை திருப்பதிகம்

ஆகிய ''மழை பொழிவிக்கும் வள்ளல் திருப் பதிகங்கள்'' ஏழினையும் ஓதுவார்கள் நாள்தோறும் ஓதிட நல்ல மழை பொழிந்து ஞாலம் செழிப்புறுவது திண்ணம்.

வைணவ ஆழ்வார் பெருமக்கள் அருளிச் செய்துள்ள நாலாயிரத் திவ்விய பிரபந்தத்தில் நம்மாழ்வார் அருளிச் செய்துள்ள திருவாய்மொழியில் உள்ள ''ஆழியெழ'' எனத்துவங்கும் திருப்பாசுரங்கள் ஓதிட நமக்கு வான்மழையை வழங்கும் நல்ல பலனை அளிக்கும் எனச் சான்றோர்கள் எடுத்துக் கூறுகிறார்கள்.

### மழை பொழிவிக்கும் வள்ளல் பதிகங்கள்

**திருக்கழுமலம்**

சேவுயருந் திண்கொடி யான்திருவடியே
சரணென்று சிறந்த அன்பால்
நாவியலு மங்கையொடு நான்முகன் றான்
வழிபட்ட நலங்கொள்கோயில்
வாவிதொறும் வண்கமல முகங்காட்டச்
செங்குமுதம் வாய்கள்காட்டக்
காவியிருங் கருங்குவளை கருநெய்தல்
கண்காட்டுங் கழுமலமே.



பெருந்தடங்கண் செந்துவர்வாய்ப் பீடுடைய
மலைச்செல்வி பிரியா மேனி
அருந்தகைய சுண்ணவெண்ணீ றலங்கரித்தான்
அமரர்தொழ அமருங்கோயில்
தருந்தடக்கை முத்தழலோர் மனைகடொறும்
இறைவனது தன்மைபாடிக்
கருந்தடங்கண் ணார்கழல்பந் தம்மானைப்
பாட்டயருங் கழுமலமே.

அலங்கல்மலி வானவருந் தானவரும்
அலைகடலைக் கடையப்பூதங்
கலங்கிவெழு கடுவிடமுண் டிருண்டமணி
கண்டத்தோன் கருதுங்கோயில்
விலங்கமலர் புயன்மறந்து மீன்சனிபுக்
கூன்சலிக்குங் காலந்தானுங்
கலங்கலிலா மனப்பெருவண் கையுடைய
மெய்யர்வாழ் கழுமலமே.

பாரிதனை நலிந்தமரர் பயமெய்தச்
சயமெய்தும் பரிசு வெம்மைப்
போரிசையும் புரமூன்றும் பொன்ற வொரு
சிலைவளைத்தோன் பொருந்துங்கோயில்
வாரிசைமென் முலைமடவார் மாளிகையின்
சூளிகைமேன் மகப்பாராட்டக்
காரிசையும் விசும்பியங்குங் கணங்கேட்டு
மகிழ்வெய்துங் கழுமலமே.

ஊர்கின்ற வரவமொளி விடுதிங்க
ளொடுவன்னி மத்தமன்னும்
நீர்நின்ற கங்கைநகு வெண்டலைசேர்
செஞ்சடையா னிகழுங்கோயில்
ஏர்தங்கி மலர்நிலவி யிசைவெள்ளி
மலையென்ன நிலவிநின்ற
கார்வண்டின் கணங்களாற் கவின்பெருகு
சுதைமாடக் கழுமலமே.

தருஞ்சரதந் தந்தருளென் றடிநினைந்து
தழலணைந்து தவங்கள்செய்த
பெருஞ்சதுரர் பெயலர்க்கும் பீடார்தோ
ழமையளித்த பெருமான்கோயில்
அரிந்தவய லரவிந்த மதுவுகுப்ப
வதுகுடித்துக் களித்துவாளை
கருஞ்சகட மிளகவளர் கரும்பிரிய
வகம்பாயுங் கழுமலமே.

புவிமுதலைம் பூதமாய்ப் புலனைந்தாய்
நிலனைந்தாய்க் கரணநான்காய்
அவையவைசேர் பயனுருவா யல்லவுரு
வாய்நின்றா னமருங்கோயில்
தவமுயல்வோர் மலர்பறிப்பத் தாழவிடு
கொம்புதைப்பக் கொக்கின்காய்கள்
கவணெறிகற் போற்கனையிற் கரைசோப்
புள்ளிரியுங் கழுமலமே.

அடல்வந்த வானவரை யழித்துலகு
தெழித்துழலு மரக்கர் கோமான்

விடல்வந்த இருபதுதோ ளெரியவிரற்
பணிகொண்டோன் மேவுங்கோயில்
நடவந்த வுழவரிது நடவொணா
வகைபரலாய்த் தென்றுதுன்று
கடல்வந்த சங்கீன்ற முத்துவயற்
கரைகுவிக்குங் கழுமலமே.

பூ மகள் தன் கோனயனும் புள்ளினொடு
கேழலுரு வாகிப்புக்கிட்
டாமளவுஞ் சென்றுமுடி யடிகாணா
வகைநின்றா னமருங்கோயில்
பாமருவுங் கலைப்புலவோர் பன்மலர்கள்
கொண்டணிந்து பரிசினாலே
காமனைகள் பூரித்துக் களிகூர்ந்து
நின்றேத்துங் கழுமலமே.

குணமின்றிப் புத்தர்களும் பொய்த்தவத்தை
மெய்த்தவமாய் நின்றுகையில்
உணல் மருவுஞ் சமணர்களு முணராத
வகைநின்றா னுறையுங்கோயில்
மணமருவும் வதுவை யொலிவிழவினொலி
யிவையிசைய மண்மேற்றேவர்
கணமருவு மறையினொலி கீழ்ப்படுக்க
மேற்படுங் கழுமலமே.

கற்றவர்கள் பணிந்தேத்துங் கழுமலத்துள்
ஈசன்றன் கழன்மேல் நல்லோர்
நற்றுணையாம் பெருந்தன்மை ஞானசம்
பந்தன்தா னயந்துசொன்ன
சொற்றுணையோ ரைந்தினொடைந் திவைவல்லார்
தூமலராள் துணைவராகி
முற்றுலக மதுவாண்டு முக்கணான்
அடிசேர முயல்கின்றாரே.

### திருவையாறு

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம் மேலுந்தி
அலமந்தபோதாக வஞ்சேலென்
றருள் செய்வா னமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென்றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில் பார்க்குந் திருவையாறே.

விடலேறு, படநாக மரைக்கசைத்து
வெற்பரையன் பாவையோடும்
அடலேறொன் றதுவேறி யஞ்சொலீர்
பலியென்னு மடிகள்கோயில்
கடலேறித் திரைமோதிக் காவிரியி
னுடன்வந்து கங்குல்வைகித்
திடலேறிச் சுரிசங்கஞ் செழுமுத்தங்
கீன்றலைக்குந் திருவையாறே.

கங்காளர் கயிலாய மலையாளர்
கானப்பே ராளர்மங்கை
பங்காளர் திரிசூலப் படையாளர்
விடையாளர் பயிலுங்கோயில்
கொங்காளப் பொழில்நுழைந்து கூர்வாயா
லிறகுலர்த்திக் கூதனீங்கிச்
செங்கானல் வெண்குருகு பைங்கானல்
இரைதேருந் திருவையாறே.

ஊன்பாயு முடைதலைகொண் டூரூரின்
பலிக்குழல்வா ருமையாள்பங்கர்
தான்பாயும் விடையேறுஞ் சங்கரனார்
தழலுரு வர் தங்குங்கோயில்
மான்பாய வயலருகே மரமேறி
மந்திபாய் மடுக்கடோறும்
தேன்பாய மீன்பாயச் செழுங்கமல
மொட்டலருந் திருவையாறே.

நீரோடு கூவிளமு நிலாமதியும்
வெள்ளெருக்கு நிறைந்தகொன்றைத்
தாரோடுதண்காந்தை கடைக்கணிந்த
தத்துவனார் த ங்கும் கோயில்
காரோடி விசும்பளந்து கடிநாறும்
பொழிலணைந்த கமழ்தார்வீதித்
தேரோடு மரங்கேறிச் சேயிழையார்
நடம்பயிலுந் திருவையாறே.

வேந்தாகி விண்ணவர்க்கு மண்ணவர்க்கும்
நெறிகாட்டும் விகிர்தனாகிப்
பூந்தாம நறுங்கொன்றை சடைக்கணிந்த
புண்ணியனார் நண்ணுங்கோயில்
காந்தார மிசையமைத்துக் காரிகையார்
பண்பாடக் கவினார்வீதித்
தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே.

நின்றலாநெடுவி சும்பி னெருக்கிவரு
புரமூன்று நீள்வாயம்பு
சென்றுலாம் படிதொட்ட சிலையாளி
மலையாளி சேருங்கோயில்
குன்றெலாங் குயில் கூவக்கொழும்பிரச
மலர்பாய்ந்து வாசமல்கு
தென்றலா ரடிவருடச் செழுங்கரும்பு
கண்வளருந் திருவையாறே.

அஞ்சாதே கயிலாய மலையெடுத்த
வரக்கர்கோன் தலைகள்பத்தும்
மஞ்சாடு தோளெரிய வடர்த்தவனுக்
கருள்புரிந்த மைந்தர்கோயில்

இஞ்சாய லிளந்தெங்கின் பழம்வீழ
விளமேதி யிரிந்தங்கோடிச்
செஞ்சாலிக் கதிருழக்கிச் செழுங்கமல
வயல்படியுந் திருவையாறே.

மேலோடி விசும்பணவி வியனிலத்தை
மிகவகழ்ந்து மிக்குநாடும்
மாலோடு நான்முகனு மறியாத
வகைநின்றான் மன்னுங்கோயில்
கோலோடக் கோல்வளையார் கூத்தாடக்
குவிமுலையார் முகத்தினின்றும்
சேலோடச் சிலையாடச் சேயிழையார்
நடமாடுந் திருவையாறே.

குண்டாடு குற்றுடுக்கைச் சமணரொடு
சாக்கியருங் குணமொன்றில்லா
மிண்டாடு மிண்டாடுரை கேளாதே
யாளாமின் மேவித் தொண்டீர்
எண்டோளர் முக்கண்ண ரெம்மீசர்
இறைவரினி தமருங்கோயில்
செண்டாடு புனற்பொன்னிச் செழுமணிகள்
வந்தலைக்குந் திருவையாறே.

அன்னமலி பொழில்புடைசூ ழையாற்றெம்
பெருமானை யந்தண்காழி
மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான
சம்பந்தன் மருவுபாடல்
இன்னிசை யாலிவைபத்து மிசையுங்கால்
ஈசனடி யேத்துவார்கள்
தன்னிசையோ டமருலகிற் றவநெறிசென்
றெய்துவார் தாழாதன்றே.

## முதுகுன்றம்

மெய்த்தாறு சுவையுமே இசையுமெண்
குணங்களும் விரும்புநால்வே
தத்தாலு மறிவொண்ணா நடைதெளியப்
பளிங்கே போலரிவைபாகம்
ஒத்தாறு சமயங்கட் கொருதலைவன்
கருதுமூர் உலவுதெண்ணீர்
முத்தாறு வெதிருதிர நித்திலம்வா
ரிக்கொழிக்கும் முதுகுன்றமே.

வேரிமிகு குழலியொடு வேடுவனாய்
வெங்கானில் விசயன்மேவு
போரின்மிகு பொறையளந்து பாசுபதம்
பரிந்தளித்த புராணர்கோயில்
காரின்மலி கடி பொழில்கள் கனிகள்பல
மலருதிர்த்துக் கயமுயங்கி
மூரிவளங் கிளர்தென்ற றிருமுன்றிற்
புகுந்துலவு முதுகுன்றமே.

தக்கனது பெருவேள்விச் சந்திரனிந்
திரனெச்ச னருக்கனங்கி
மிக்கவிதா தாவினொடும் விதிவழியே
துண்டித்த விமலர்கோயில்
கொக்கினிய கொயும்வருக்கை கதலிகமு
குயர்தெங்கின் குவைகொள்சோலை
முக்கனியின் சாறொழுகிச் சேறுலரா
நீள்வயல்சூழ் முதுகுன்றமே.

வெம்மைமிகு புரவாணர் மிகைசெய்ய
விறலழிந்து விண்ணுளோர்கள்
செம்மலரோன் இந்திரன்மால் சென்றிரப்பத்
தேவர்களே தேரதாக
மைம்மருவு மேருவிலு மாசுணநா
ணரியெரிகால் வாளியாக
மும்மதிலும் நொடியளவிற் பொடிசெய்த
முதல்வனிடம் முதுகுன்றமே.

இழைமேவு கலையல்கு லேந்திழையா
ளொருபாலா யொருபாலெள்கா
துழைமேவு முரியுடுத்த வொருவனிருப்
பிடமென்ப ரும்பரோங்கு
கழைமேவு மடமந்தி மழைகண்டு
மகவினொடும் புகவொண்கல்லின்
முழைமேவு மால்யானை யிரைதேரும்
வளர்சாரல் முதுகுன்றமே.

நகையார்வெண் டலைமாலை முடிக்கணிந்த
நாதனிடம் நன்முத்தாறு
வகையாரும் வரைப்பண்டங் கொண்டிரண்டு
கரையருகு மறியமோதித்
தகையாரும் வரம்பிடறிச் சாலிகழு
நீர்குவளை சாயப்பாய்ந்து
முகையார்செந் தாமரைகள் முகமலர
வயறழுவு முதுகுன்றமே.

அறங்கிளரும் நால்வேத மாலின்கீழ்
இருந்தருளி யமரர்வேண்ட
நிறங்கிளர்செந்தாமரை யோன் சிரமைந்தின்
ஒன்றறுத்த நிமலர்கோயில்
திறங்கொள்மணித் தரளங்கள் வரத்திரண்டங்
கெழிற்குறவர் சிறுமிமார்கள்
முறங்களினாற் கொழித்துமணி செலவிலக்கி
முத்துலைப்பெய் முதுகுன்றமே.

கதிரொளிய நெடுமுடி பத் துடையகடல்
இலங்கையர்கோன் கண்ணும்வாயும்
பிதிரொளிய கனல்பிறங்கப் பெருங்கயிலை
மலையைநிலை பெயர்த்தஞான்று

மதிலளகைத் திறை முரலமலரடி யொன்று
ஊன்றிமறை பாடவாங்கே
முதிரொளிய சுடர்நெடுவான் முன்னீந்தான்
வாய்ந்தபதி முதுகுன்றமே.

பூவார்பொற் றவிசின்மிசை யிருந்தவனும்
பூந்துழாய் புனைந்த மாலும்
ஓவாது கழுகேன மாயுயர்ந்தாழ்ந்
துறநாடி யுண்மைகாணாத்
தேவாருந் திருவுருவன் சேருமலை
செழுநிலத்தை மூடவந்த
மூவாத முழங்கொலிநீர் கீழ்தாழ
மேலுயர்ந்த முதுகுன்றமே.

மேனியிற்சீ வரத்தாரும் விரிதருதட்
டுடையாரும் விரவலாகா
ஊனிகளா யுள்ளார்சொற் கொள்ளாது
முள்ளுணர்ந்தங் குய்மின்தொண்டீர்
ஞானிகளா யுள்ளார்கள் நான்மறையை
முழுதுணர்ந்தைம் புலன்கள்செற்று
மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து
தவம்புரியும் முதுகுன்றமே.

முழங்கொலிநீர் முத்தாறு வலஞ்செய்யு
முதுகுன்றத் திறையை மூவாப்
பழங்கிழமைப் பன்னிருபேர் படைத்துடைய
கழுமலமே பதியாக்கொண்டு
தழங்கெரிமூன் றோம்புதொழிற் றமிழ்ஞான
சம்பந்தன் சமைத்தபாடல்
வழங்குமிசை கூடும்வகை பாடுமவர்
நீடுலக மாள்வர்தாமே.

## திருவீழிமிழலை

ஏரிசையும் வடவாலின் கீழிருந்தங்
கீரிருவர்க் கிரங்கிநின்று
நேரியநான் மறைப்பொருளை யுரைத்தொளிசேர்
நெறியளித்தோ னின்றகோயில்
பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும்
பயின்றோது மோசைகேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்
பொருட்சொல்லு மிழலையாமே.

பொறியரவ மதுசுற்றிப் பொருப்பேமத்
தாகப்புத் தேளிர்கூடி
மறிகடலைக் கடைந்திட்ட விடமுண்ட
கண்டத்தோன் மன்னுங்கோயில்
செறியிதழ்த்தா மரைத்தவிசிற் றிகழ்ந்தோங்கு
மிலைக்குடைக்கீழ்ச் செய்யார்செந்நெல்
வெறிகதிர்ச் சாமரையிரட்ட இளவன்னம்
வீற்றிருக்கும் மிழலையாமே.

எழுந்துலகை நலிந்துழலு மவுணர்கள்தம்
புரமூன்று மெழிற்கணாடி
உழுந்துருளுமளவையினொள்ளெரிகொளவெஞ்
சிலைவளைத்தோன் உறையுங்கோயில்
கொழுந்தரளம் நகைகாட்டக் கோகனக
முகங்காட்டக் குதித்துநீர்மேல்
விழுந்தகயல் விழிகாட்ட விற்பவளம்
வாய்காட்டும் மிழலையாமே.

உரைசேரு மெண்பத்து நான்குநூ
றாயிரமாம் யோனிபேதம்
நிரைசேரப் படைத்தவற்றி னுயிர்க்குயிராய்
அங்கங்கே நின்றான்கோயில்
வரைசேரு முகின்முழவ மயில்கள்பல
நடமாட வண்டுபாட
விரைசேர்பொன் னிதழிதர மென்காந்தள்
கையேற்கும் மிழலையாமே.

காணுமாறரியபெரு மானாகிக்
காலமாய்க் குணங்கண்மூன்றாய்ப்
பேணுமூன் றுருவாகிப் பேருலகம்
படைத்தளிக்கும் பெருமான்கோயில்
தாணுவாய் நின்றபரதத் துவனை
யுத்தமனை யிறைஞ்சீரென்று
வேணுவார் கொடிவிண்ணோர் தமைவிளிப்ப
போலோங்கு மிழலையாமே.

அகனமர்ந்த வன்பினரா யறுபகைசெற்
றைம்புலனு மடக்கிஞானம்
புகலுடையோர் தம் முள்ளப் புண்டரிகத்
துள்ளிருக்கும் புராணர்கோயில்
தகவுடைநீர் மணித்தலத்துச் சங்குளவர்க்
கந்திகழச் சலசத்தீயுள்
மிகவுடைய புன்குமலர் பொரியட்ட
மணஞ்செய்யு மிழலையாமே.

ஆறாடு சடைமுடியன் அனலாடு
மலர்க்கையன் இமயப்பாவை
கூறாடு திருவுருவன் கூத்தாடுங்
குணமுடையோன் குளிருங்கோயில்
சேறாடு செங்கழுநீர்த் தாதாடி
மதுவுண்டு சிவந்தவண்டு
வேறாய வுருவாகிச் செவ்வழிநற்
பண்பாடு மிழலையாமே.

கருப்பமிகு முடலடர்த்துக் காலூன்றிக்
கைமறித்துக் கயிலையென்னும்
பொருப்பெடுக்கலுறுமரக்கன் பொன்முடி தோள்
நெரித்தவிரற் புனிதர்கோயில்

தருப்பமிகு சலந்தரன்றன் உடல்தடிந்த
சக்கரத்தை வேண்டியீண்டு
விருப்பொடுமால் வழிபாடு செய்யவிழி
விமானஞ்சேர் மிழலையாமே.

செந்தளிர்மா மலரோனுந் திருமாலும்
ஏனமோ டன்னமாகி
அந்தமடி காணாதே யவரேத்த
வெளிப்பட்டோ னமருங்கோயில்
புந்தியினால் மறைவழியே புற்பரப்பி
நெய்சமிதை கையிற்கொண்டு
வெந்தழலின் வேட்டுலகின் மிகவளிப்போர்
சேருமூர் மிழலையாமே.

எண்ணிறந்த அமணர்களு மிழிதொழில்சேர்
சாக்கியரு மென்றுந்தன்னை
நண்ணரிய வகைமயக்கித் தன்னடி யார்க்
கருள்புரியு நாதன்கோயில்
பண்ணமரு மென்மொழியார் பாலகரைப்
பாராட்டு மோசைகேட்டு
விண்ணவர்கள் வியப்பெய்தி விமானத்தோ
டும்இழியு மிழலையாமே.

மின்னியலு மணிமாட மிடைவீழி
மிழலையான் விரையார்பாதம்
சென்னிமிசைக் கொண்டொழுகுஞ் சிரபுரக்கோன்
செழுமறைகள் பயிலுநாவன்
பன்னியசீர் மிகுஞான சம்பந்தன்
பரிந்துரைத்த பத்துமேத்தி
இன்னிசையாற் பாடவல்லார் இருநிலத்தில்
ஈசனெனு மியல்பினோரே.

## திருக்கச்சியேகம்பம்

வெந்தவெண் பொடிப்பூசு மார்பின்விரி நூலொருபால்
பொருந்தக்
கந்தமல்கு குழலியோடுங் கடிபொழிற் கச்சி தன்னுள்
அந்தமில் குணத்தாரவர்போற்ற அணங்கினொ டாடல்புரி
எந்தை மேவிய வேகம்பந் தொழுதேத்த இடர்கெடுமே.

வரந்திகழு மவுனர் மாநகர்மூன் றுடன்மாய்ந்தவியச்
சரந்துரந் தெரிசெய்த தாழ்சடைச் சங்கரன்மேயவிடம்
குருந்த மல்லிகை கோங்குமா தவிநல்ல குராமரவம்
திருந்துபைம் பொழிற்கச்சி யேகம்பஞ்
சேரவிடர்கெடுமே.

வண்ணவெண் பொடிப்பூசு மார்பின் வரியர வம்புனைந்து
பெண்ணமர்ந் தெரியாடல் பேணிய பிஞ்ஞகன்
மேயவிடம்
விண்ணமர் நெடுமாட மோங்கி விளங்கிய கச்சிதன்னுள்
திண்ணமாம் பொழில்சூழ்ந்த வேகம்பஞ்
சேரவிடர்கெடுமே.

தோலுநூ லுந்துதைந்த வரைமார்பிற் சுடலை
வெண்ணீறணிந்து
காலன்மாள் வுறக்காலாற் காய்ந்த கடவுள் கருதுமிடம்
மாலைவெண் மதிதோயுமாமதிற் கச்சி மாநகருள்
ஏலநாறிய சோலைசூ ழேகம்ப மேத்த விடர் கெடுமே.

தோடணிம் மலர்க்கொன்றை சேர்சடைத் தூமதி
யம்புனைந்து
பாடல்நான் மறையாகப் பல்கணப் பேய்களவைசூழ
வாடல்வெண் டலையோ டனலேந்தி மகிழ்ந்துடன்
ஆடல்புரி
சேடர்சேர் கலிக்கச்சி யேகம்பஞ் சேர விடம்கெடுமே.

சாகம்பொன் வரையாகத்தானவர் மும்மதில் சயவெய்து
ஆகம்பெண் ணொரு பாகமாக அரவொடு நூலணிந்து
மாகந்தோய் மணிமாட மாமதிற் கச்சி மாநகருள்
ஏகம்பத்துறையீசன் சேவடியேத்த விடர்கெடுமே.
(ஏழாம் பாடல் கிடைக்கவில்லை)
வாணிலா மதிபுல்கு செஞ்சடை வாளரவம் அணிந்து
நாணிடத் தினில்வாழ்க்கை பேணி நகுதலையிற் பலிதேர்ந்
தேணிலா அரக்கன்தன் நீண்முடி பத்து மிறுத்தவனூர்
சேனுலாம் பொழிற்கச்சி யேகம்பஞ் சேர விடர்கெடுமே.

பிரமனுந் திருமாலுங் கைதொழப் பேரழ லாயபெம்மான்
அரவஞ் சேர்சடையந்தணன் அணங்கினொடு
அமருமிடம்
காலில்வண் கையினார்கள் வாழ்கலிக் கச்சி மாநகருள்
மரவஞ்சூழ் பொழிலேகம் பந்தொழ வல்வினை
மாய்ந்தறுமே.

குண்டுபட் டமணா அவரொடுங் கூறைதம்
மெய்போர்க்கும்
மிண்டர் கட்டிய கட்டுரையவைகொண்டு விரும்பேன்மின்
விண்டவர் புரமூன்றுவெங்கணை யொன்றினா லவியக்
கண்டவன் கலிக்கச்சி யேகம்பங் காண விடர்கெடுமே

ஏரினார் பொழில்சூழ்ந்த கச்சியேகம்ப மேயவனைக்
காரினார் மணிமாட மோங்கு கழுமல நன்னகருள்
பாரினார் தமிழ்ஞான சம்பந்தன் பரவிய பத்தும்வல்லா
சீரினார் புகழோங்கி விண்ணவ ரோடுஞ் சேர்பவரே.

## திருப்பறியலூர் வீரட்டம்

கருத்தன் கடவுள் கனலேந்தியாடும்
நிருத்தன் சடைமேல்நி ரம்பா மதியன்
திருத்த மடையார் திருப்பறி யலூரில்
விருத்த னெனத்தகும் வீரட்டத்தானே.

மருந்த னமுதன் மயானத்துள் மைந்தன்
பெருந்தண் புனற்சென்னி வைத்த பெருமான்
திருந்து மறையோர் திருப்பறி யலூரில்
விரிந்த மலர்ச்சோலை வீரட்டத்தானே.

துளிர்த்தார் சடையன் கொடுஞ்சிலை விற்காமன்
விளிந்தான் அடங்க வீந்தெய்தச் செற்றான்
தெளிந்தார் மறையோர் திருப்பறி யலூரில்
மிளிர்ந்தார் மலர்ச்சோலை வீரட்டத்தானே.

பிறப்பாதி யில்லான் பிறப்பார் பிறப்புச்
செறப்பாதி யந்தஞ் செலச்செய்யுந் தேசன்
சிறப்பா டுடையார் திருப்பறி யலூரில்
விறற்பா ரிடஞ்சூழ வீரட்டத் தானே.

கரிந்தா ரிடுகாட்டில் ஆடுங்க பாலி
புரிந்தார் படுதம் புறங்காட் டிலாடும்
தெரிந்தார் மறையோர் திருப்பறி யலூரில்
விரிந்தார் மலர்ச்சோலை வீரட்டத்தானே.

அரவுற்ற நாணா அனலம்ப தாகச்
செருவுற் றவர்புரந் தியெழச் செற்றான்
திருவிற் கொடிசூழ் திருப்பறி யலூரில்
வெருவுற் றவர்தொழும் வீரட்டத்தானே.

நரையார் விடையான் நலங்கொள் பெருமான்
அரையா ரரவம் மழகா வசைத்தான்
திரையார் புனல்சூழ் திருப்பறி யலூரில்
விரையார் மலர்ச்சோலை வீரட்டத் தானே.

வளைக்கும் மெயிற்றின் அரக்கன் வரைக்கீழ்
இளைக்கும் படிதா னிருந்தேழை யன்னம்
திளைக்கும் படுகர்த் திருப்பறி யலூரில்
விளைக்கும் வயல்சூழ்ந்த வீரட்டத் தானே.

விளங்கொள் மலர்மே லயனோத வண்ணன்
துளங்கும் மனத்தார் தொழத்தழ லாய் நின்றான்
இளங்கொம் பனாளோடி ணைந்தும் பிணைந்தும்
விளங்குந் திருப்பறியல் வீரட்டத் தானே.

சடையன் பிறையன் சமண்சாக் கியரோடு
அடையன் பிலாதான் அடியார் பெருமான்
உடையன் புலியின்உரி தோ லரைமேல்
விடையன் திருப்பறியல் வீரட்டத் தானே.

நறுநீ ருகுங்காழி ஞானசம்பந்தன்
வெறிநீர்த் திருப்பறியல் வீரட்டத் தானை
பொறிநீ டரவன் புனைபாடல் வல்லார்க்
கறுநீ டவலம் அறும்பிறப் புத்தானே.

## திருப்பராய்த்துறை

நீறுசேர்வதோர் மேனியர் நேரிழை
கூறுசேர்வதோர் கோலமாய்ப்
பாறுசேர்தலைக் கையர்பராய்த்துறை
ஆறுசேர்சடை யண்ணலே.

கந்தமாமலர்க் கொன்றைகமழ்சடை
வந்தபூம்புனல் வைத்தவர்
பைந்தண்மாதவி சூழ்ந்தபராய்த்துறை
அந்தமில்ல வடிகளே.

வேதர்வேதமெல்லா முறையால்விரித்
தோதநின்ற வொருவனார்
பாதிபெண்ணுரு ஆவர்பராய்த்துறை
ஆதியாயவடிகளே.

தோலுந்தம்மரை யாடைசுடர்விடு
நூலுந்தாமணி மார்பினர்
பாலுநெய் பயின் றாடுபராய்த்துறை
ஆலநீழ லடிகளே.

விரவி நீறுமெய் பூசுவர்மேனிமேல்
இரவில் நின்றெரி யாடுவர்
பரவினாரவர் வேதம்பராய்த்துறை
அரவமார்த்த வடிகளே.

மறையுமோதுவர் மான்மறிக்கையினர்
கறைகொள்கண்ட முடையவர்
பறையுஞ்சங்கு மொலிசெய்பராய்த்துறை
அறைய நின்ற வடிகளே.

விடையுமேறுவர் வெண்பொடிப்பூசுவர்
சடையிற்கங்கை தரித்தவர்
படைகொள்வெண்மழு வாளர்பராய்த்துறை
அடையநின்ற வடிகளே.

தருக்கின்மிக்க தசக்கிரிவன்றனை
நெருக்கினார்விர லொன்றினால்
பருக்கினாரவர் போலும்பராய்த்துறை
அருக்கன்றன்னை யடிகளே.

நாற்றமாமல ரானொடுமாலுமாய்த்
தோற்றமும்அறி யாதவர்
பாற்றினார்வினை யானபராய்த்துறை
ஆற்றல்மிக்க வடிகளே.

திருவிலிச்சில தேரமணாதர்கள்
உருவிலாவுரை கொள்ளேலும்
பருவிலாலெயி லெய்துபராய்த்துறை
மருவினான்றனை வாழ்த்துமே.

செல்வமல்கிய செல்வர்பராய்த்துறைச்
செல்வர்மேற்சிதை யாதன
செல்வன்ஞானசம் பந்தனசெந்தமிழ்
செல்வமாமிவை செப்பவே.

## நம்மாழ்வார் அருளிய மழைபொழிவிக்கும் திருவாய்மொழிப் பாசுரம்

ஆழியெழச் சங்கும்வில்லுமெழ திசை
வாழியெழத் தண்டும்வாளுமெழ அண்டம்
மோழையெழ முடிபாதமெழ அப்பன்
ஊழியெழ உலகங்கொண்டவாறே

## மழைபொழிய தினமும் இப்பாடல்களைப்பாடி வேண்டுவோம்

(வான்மழை பொழிவித்து வையத்துயிர்களை வாழ்விக்கும் பேராற்றல் இறைவனிடம் மட்டுமே உள்ளது. இறைவனிடம் கையேந்துவோம். அவன் இல்லை என்று கூறாமல் வான்மழையை நிறைவாகப் பெய்வித்து மக்களை வாழவைப்பான்)

வான்முகில் வழாஅது பெய்க!
மலிவளம் சுரக்க! மன்னன்
கோல்முறை அரசுசெய்க!
குறையிலா துயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க!
நற்றவம் வேள்வி மல்க!
மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம்.

கந்தபுராணம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

-திருஞானசம்பந்தர் தேவாரம்.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்குபெருஞ் செந்நெல் ஊடு கயலுகள
பூங்குவளைப் போதில் பொறிவண்டுகண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்தமுலை பற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்.

- திருப்பாவை

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்து உடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள்
இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம் பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நம்தம்மை ஆளுடையான்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழைஏலோர் எம்பாவாய்

- திருவெம்பாவை.

ஆறுமலைக்கு எதிர்ந்தோடுமொலி அர
வூறுசுலாய் மலைதேய்க்குமொலி கடல்
மாறுசுழன்று அழைக்கின்றவொலி அப்பன்
சாறுபட அமுதங்கொண்டநான்றே. 2

நான்றில் ஏழ்மண்ணும்தானத்தவே பின்னும்
தான்றிய ஏழ்மலைதானத்தவே பின்னும்
நான்றில ஏழ்கடல்தானத்தவே அப்பன்
ஊன்றியிடந்து எயிற்றில்கொண்டநாளே. 3

நாளுமெழ நிலநீருமெழ விண்ணும்
கோளுமெழ எரிகாலுமெழ மலை
தாளுயெழச் சுடர்தானுமெழ அப்பன்
ஊளியெழ உலகமுண்டவூணே. 4

ஊணுடைமல்லர் ததைந்தவொலி மன்னர்
ஆணுடைச்சேனை நடுங்குமொலி விண்ணுள்
ஏணுடைத்தேவர் வெளிப்பட்டவொலி அப்பன்
காணுடைப்பாரதம் கையறைபோழ்தே. 5

போழ்துமெலிந்த புன்செக்கரில் வான்திசை
சூழுமெழுந்து உதிரப்புனலா மலை
கீழ்துபிளந்த சிங்கமொத்ததால் அப்பன்
ஆழ்துயர்செய்து அசுரரைக்கொல்லுமாறே. 6

மாறுநிரைத்து இரைக்குமசரங்கள் இன
நூறுபிணம் மலைபோல் புரள கடல்
ஆறுமடுத்து உதிரபுனலர அப்பன்
நீறுபட இலங்கைசெற்றநேர. 7

நேர்சரிந்தான் கொடிக்கோழிகொண்டான் பின்னும்
நேர்சரிந்தான் எரியுமனலோன் பின்னும்
நேர்சரிந்தான் முக்கண்மூர்த்திகண்டீர் அப்பன்
நேர்சரிவாணன் திண்தோள்கொண்டவன்றே. 8

அன்றுமண் நீரெரிகால் விண்மலைமுதல்
அன்றுசுடர் இரண்டுபிறவும் பின்னும்
அன்றுமழையுயிர் தேவும்மற்றும் அப்பன்
அன்றுமுதல் உலகம் செய்ததுமே. 9

மேய்நிரைகீழ்புக மாபுரள சுனை
வாய்நிறைநீர் பிளிறிச்சொரிய இன
ஆநிரைபாடி அங்கேயொடுங்க அப்பன்
தீமழைகாத்துக் குன்றமெடுத்தானே. 10

குன்றமெடுத்த பிரான் அடியாரொடும்
ஒன்றிநின்ற சடகோபனுரைசெயல்
நன்றிபுனைந்த ஓராயிரத்துள்ளிவை
வென்றிதரும்பத்தும் மேவிக்கற்பார்க்கே. 11

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்

***

# நியாயங்கள் தருமாறுவதில்லை!

- கலைமாமணி மா. லட்சுமணன்

(நீதிக் கதை)

சொர்க்கத்தை ஒரு முறை சுற்றிப் பார்த்து விட்டு நரகத்தை மேற்பார்வை இட்டுக் கொண்டிருந்தான் பகவான், கண்ணன்.... அங்கே தென்பட்ட நரகக் குழியை எட்டிப் பார்த்தான்! ஆயிரக்கணக்கான உயிர்கள் கடைத் தேற வழியின்றி அங்கே வதை பட்டுக் கொண்டு உழன்றுகொண்டிருந்தன.

கண்ணனைப் பார்த்த ஒரு கிழவி - "கண்ணா! என்னைக் காப்பாற்று!" காப்பாற்று! என்று கதறினாள்.

"உன் வாழ்நாளில் நீ புண்ணியம் ஏதும் செய்யவில்லை - அப்படி ஏதாவது செய்திருந்தால் அதை வைத்து உன்னை மீட்க வழியிருக்கும். உனக்கு உதவி செய்ய மார்க்கமே இல்லையே" என்றான் கண்ணன். கண்ணா எனக்கு நன்றாக நினைவிருக்கிறது - வாழைப்பழம் ஒன்றை நான் தின்றுவிட்டு அதன் தோலை பசுமாட்டிற்குக் கொடுத்தேன் அதுவும் சாப்பிட்டது. அது புண்ணியமில்லையா?" எனக் கேட்டாள்கிழவி.

"இதோ பார் இதுதானே அந்த வாழைப் பழத் தோல்... இதைப் பிடித்துக் கொண்டு மேலே வா" எனக் கூறி வாழைப் பழத் தோலை நீட்டினான் கண்ணன்.

கிழவியும் அந்த வாழைப்பழத் தோலைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள். நரகக் குழியிலிருந்து அந்தக் கிழவியை மேலே தூக்கினான் கண்ணன்.

கிழவி மேலே போவதை மற்ற உயிர்கள் பார்த்தன. ஒரு உயிர் ஓடிப்போய் கிழவியின் காலைப் பிடித்துக் கொண்டது. மற்றொரு உயிர் வந்து அதுபோலவே அடுத்த உயிரின் காலைப் பிடித்துக் கொண்டது. இப்படியாக சங்கிலித் தொடர்போல வரிசையாகப் பல உயிர்கள் ஒன்றின் காலை மற்றொன்று பற்றிக் கொண்டது.

அத்தனை உயிர்களும் பாதிக்கிணறு தாண்டி விட்டது. பல உயிர்கள் கண்ணனின் தயவால் கடைத் தேறப் போகின்றோம் என்ற நிலையில் மேலே வந்து கொண்டிருக்கும் கிழவி கீழே திரும்பிப் பார்த்தாள்.


அவளுக்கு எரிச்சல் தாங்க முடியவில்லை. "எனக்கு மட்டுந்தானே கண்ணன் கைகொடுத்தான்!? என்னை மட்டும் காப்பாற்ற வேண்டுமென்பதுதானே கண்ணன் எண்ணம்! விடுங்கள் காலை" என உதறினாள். வாழைப்பழத் தோல் வழுக்கியது. கிழவியும் சேர்ந்து அவர்களுடன் மீண்டும் நரகக் குழியில் விழுந்தாள். "நீ செய்த புண்ணியத்தின் பலனாக காப்பாற்றப் பட இருந்தாய். பொறாமை எனும் தீய குணத்தால் மீண்டும் நரகத்தில் வீழ்ந்தாய்".

மற்றவர்கள் காப்பாற்றப் படக் கூடாது என கண்ணன் நீனைக்கவில்லை. அவன் தான் தூக்குகிறானே பாரம் அவனுக்குத் தான்... உலகில் கடைப்பட்ட செய்கை எதுவென்றால் மற்றவர்கள் பெறும் உதவியைத் தடுப்பதுதான் என்ற நீதியை எடுத்துரைத்தான் கண்ணன்.... பகவான் பத்து அவதாரம் எடுத்தான். இதில் மிகவும் சிறப்பானது கிருஷ்ணாவ தாரம்தான் என பக்திமான்கள் பாராட்டுவர்.

பாரதப்போர் முடிந்து பாண்டவர்க்கு வெற்றியைத் தேடித்தந்து பகவத்கீதை எனும் மாபெரும் நீதி நூலை உலகோருக்குத் தந்து, அமைதியாக ஓய்வு எடுத்துக் கொண்டிருந்தான் கண்ணன். கண்ணனை அணுகினான் அவனது தேரோட்டி - தங்களிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும் தவறாக நினைத்துக் கொள்ள மாட்டீர்களே? எனக் கேட்டான்! சிரித்துக் கொண்டான் கண்ணன். காரணம் கிருஷ்ணாவதாரத்திலே யார் மீதும், காழ்ப்புணர்ச்சியோ - பழிவாங்கும் தன்மையோ, வெளிப்படுத்தாமல் தர்மத்திற்காக மட்டுமே போராடி வெற்றி பெற்றான். இதனால் தான் தேரோட்டியைப் பார்த்து உன் மனதிற்பட்டதை வெளிப்படையாகக் கேள். எந்த அசூயையுமில்லாமல் நான் உனக்கு பதில் சொல்கிறேன் என்றான்.

தைரியத்தை வரவழைத்துக் கொண்டு மெல்ல பேச ஆரம்பித்தான் தேரோட்டி.

தாங்கள் திரிகாலமும் உணர்ந்தவர்! இது இப்படித்தான் இந்த நேரத்தில், இந்த இடத்தில் நடக்கும் என்பதை முன் கூட்டியே அறிந்தவர் - அப்படியிருக்கும்போது தருமர் சூதாடப்போவதும் அதன் விளைவால் பாண்டவர்கள் அல்லல் படப்போவதும் தாங்கள் அறியாமல் இருந்திருக்க முடியாது! அறிந்



திருந்தும் அவரது செய்கையை தடுக்காமல் விட்டது ஏன்?

இதற்கு உடனடியாக கண்ணன் பதில் ஏதும் கூறவில்லை...

தேரோட்டியும் ஆர்வத்துடன் கண்ணனின் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான்!

கண்ணன் கூற ஆரம்பித்தான்.

இன்றுதான் நடக்கப்போகிறது என்பதை முன் கூட்டியே அறிந்து அவற்றை நடக்க ஒட்டாது தடுத்து நிறுத்தி விட்டால் இந்த உலகமே அசைவற்றுப் போய் விடும். ஏற்றத்தாழ்வுகளும் - இன்பமும் துன்பமும் இயற்கையின் நியதி!... அந்த இயற்கைக்கு நான் கூட கட்டுப்பட்டவன் தான்...

துரியோதனனுடன் தான் சதுரங்கம் ஆட

போனார் தருமர். போன இடத்தில் நடந்தது என்ன

காய்களை நான்தான் உருட்டுவேன் என சகு

கூறினான்.

இதை ஏற்றுக் கொள்ளாமல் தருமர் தவி

திருக்கலாம். அல்லது எனக்குப் பதிலாக எனது கண்ண

காய்களை உருட்டுவார் என்று கூறியிருந்தால் நா

எல்லாவற்றையும் உருட்டியிருப்பேன் என்றார்..

இந்த நியாயத்தை முழுமையாக ஏற்றுக் கொண்டா

தேரோட்டி.

நியாயங்கள் தடுமாறுவதில்லை!
தடம் மாறிப் போவதுமில்லை!

***

# "திருப்பாம்புரம்" தல வரலாறு

சீரணி திகழ் திருமார்பில் வெண்நூலர், திரிபுரம்
எரிசெய்த செல்வர்,
வாரணி வனமுலை மங்கை ஓர்பங்கர், மான்மறி
ஏந்திய மைந்தர்,
காரணி மணிதிகழ் மிடறுடை அண்ணல், கண்ணுதல்,
பாரணி திகழ்தரு நான்மறையாளர் - பாம்புர
நன்னகராரே.

- திருஞானசம்பந்தர் தேவாரம்.

## ஆலயங்கள்

ஆதியும் அந்தமும் கடந்த பரம்பொருள் உலக உயிர்கள் உய்யும் பொருட்டு அருவ நிலையி னின்றும் இறங்கி, இப்பூவுலகின்கண் பல தலங்களில் தெய்வத் திருமேனி கொண்டு எழுந்தருளி நண்ணும் அடியார்கள் துயர்போக்கி அருள்பாலிக்கும் இடங் களே ஆலயங்கள் ஆகும்.

எங்கும் சிவனிருப்பான் ஆனாலும் ஏசற்ற
சங்கமத்தும் சற்குருவின் தன்னிடத்தும் - லிங்கத்தும்
ஆவினுடம் பெல்லாம் ஆவரித்து நிற்கினும்பால்
பாவு முலைக்கண் மிகுதிப்பார்.

- சிவஞானப் பிரகாச வெண்பா

இருள்சுரபிக் கெங்கும் உருக்காண ஒண்ணாத
பால் முலைப்பால் விம்மி ஒழுகுவது போல
வெளிப்பட்டருள்வன் அன்பர்க்கே

- சிவஞான சித்தியார்.

பசுவின் உடல் முழுவதும் பால் பரவியிருந்த போதிலும் மடியின் வழியாகவே பால் வெளிப்படு வதுபோல. இறைவன் எங்கும் நிறைந்திருந்த போதி லும், பெரியோர்கள் அமைத்துள்ள ஆலயங்களில் உள்ள மூர்த்தங்களின் மூலமாகவே அருள் பொழி கின்றான்.

கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம், என்பது முதுமொழி, குடியிருக்கும் இடங்களிலெல் லாம் கோயில் இருக்க வேண்டும் என்று, நாட்டிலுள்ள நல்லோர் நற்பணிகள் செய்து திருக்கோயில்களை உருவாக்கினர்.

## திருத்தலங்கள்

புண்ணியப் பெருக்குடைய தமிழ்நாட்டில், சிவபெருமான் கோயில்கள், திருமால் கோயில்கள், விநாயகர் கோயில்கள், முருகப்பெருமான் கோயில்கள், அம்மன் கோயில்கள் எனப்பலவுள்ளன. இவை களில் தேவாரப் பதிகம் பாடப் பெற்ற தலங்கள், பெயர் மட்டும் குறிப்பிடப்பெற்ற வைப்புத் தலங்கள் புலவர் களால் தனிப்பாடல் பாடப்பெற்ற தலங்கள், பிற் காலத்தில் இறையன்பர்களால் அமைக்கப் பெற்ற அபிமானத் தலங்கள் ஆகியவைகள் அடங்கியுள்ளன. சிவாலயங்களுள், தேவாரத் திருப்பதிகம் பாடப்பெற்ற தலங்களே சிறப்புடையனவாக போற்றப்படுகின்றன.

தேவாரம் பாடப்பெற்ற தலங்கள் 274. அவை களுள் காவிரிக்கு தென்கரையில் அமையப்பெற்றவை 127. அவைகளுள் 59-வது திருத்தலமாக திருப்பாம் புரம் போற்றப்படுகிறது. இத்தலம் திருஞானசம்பந்த ரால் தேவாரம் பாடப்பெற்ற தலம்.

## தலம் அமைவிடம்

சோழ வளநாட்டில் அமைந்துள்ள இத்தலத் திற்கு பேருந்து தடம் உள்ளது. நிறுத்தம் - கற்கத்தி, கற்கத்தியானது கும்பகோணத்திற்கும் பேரளத்திற்கும் இடையில் உள்ளது. கற்கத்தியிலிருந்து சுமார் 3 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது திருப்பாம் புரம். இத்தலத்தில் இருந்து சுமார் 4 கி.மீ. தொலை வில் பேரளம் ரயில் நிலையம் உள்ளது. மயிலாடு துறை - திருவாரூர் ரயில் தடத்தில் பேரளம் அமைந் துள்ளது. பேரளத்திலிருந்து சிற்றுந்து மூலமும், மயிலாடுதுறை யிலிருந்து நகரப்பேருந்து, சிற்றுந்து மூலமும் இத்தலத்தை (கோயில் வரை) அடையலாம்.

மாவட்டம் - திருவாரூர், வட்டம் : குடவாசல்.

தலம் : திருப்பாம்புரம், பாம்புர நகர், பாம் புரம், சேஷபுரி, உரகபுரம்.
தொலைபேசி : 0435 - 69399

கல்வெட்டின்படி உய்யகொண்டார் வளநாட்டு திருப் பாம்புரம். தேவாரத்தின்படி பாம்புர நன்னகர்

இறைவன் : சேஷபுரீஸ்வர், பாம்பீசர், பாம்புர நாதர், பாம்புபுரீஸ்வரர், பாம்புரேசர்.



இறைவி : வண்டார் குழலி, பிரமராம்பிகை, வண்டுசேர் குழலி, வண்டார் பூங்குழலி, வண்டார்பூங்குழல் வல்லி,

தேவாரத்தில் : மாமலையாட்டி

தலவிருட்சம் : வன்னி

தீர்த்தம் : ஆதிசேட தீர்த்தம்

சிறப்பு சன்னதி : ராகு, கேதுவின் ஏகசரீர சன்னதி

தலைச்சிறப்பு : காளஹஸ்தி, குடந்தை, திருநாகேஸ்வரம், நாகூர் மற்றும் கீழ்ப்பெரும் பள்ளம் ஆகிய 5 தலங்களின் பெருமையும் ஒருங்கே அமையப்பெற்றது.

**தலப்பெயர்க் காரணம்**

எறும்பு பூசித்ததால் அவ்வூர் எறும்பியூர் (திரு வெறும்பூர்) எனவும், யானை பூசித்ததால் அவ்வூர் ஆனைக்கா (திருவானைக்காவல்) எனவும் பெயர் பெற்றதைப் போல பாம்பு பூசித்ததால் இவ்வூர் பாம்புபுரம் என பெயர் பெற்றது. நாளடைவில் அது மருவி பாம்புரம் என்றாகி பின் திரு எனும் அடை மொழி இணைந்து திருப்பாம்புரம் என்றானது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றாலும் சிறப்புடைய திருத்தலங்கள் மக்கள் மனத்தில் நீங்காத இடம் பெறுவதற்கு அத்திருத்தலத்தில் வாழ்ந்த 'ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர் பலர்' பல தலைமுறைகளாகச் செய்துவரும் தெய்வத் திருத் தொண்டும் காரணமாக அமைகிறது. திருப்பாம்புரத் தில் தொடர்ந்து எட்டுத் தலைமுறைகளாக 'இன்னிசை யாய் இசைப்பயனாய்' இருக்கும் திரும்பாம்புர நாதருக்கு இயல் இசைத் தொண்டு புரிந்து வரும் சான்றோர்களை நினைவு கூர்வதும் அத்திருத்தலத் தின் பிரசித்திக்கு ஒரு காரணமாக அமைவதாகும்.

ஏறத்தாழ 300 ஆண்டுகளுக்கு முன் அங்கு வாழ்ந்த அமிர்தகவி குப்பையா பிள்ளை அத்திருக் கோயிலில் தேவார திருவாசகங்களை ஓதுவதிலும், முத்துத் தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை, அருணாசல கவிராயர் கீர்த்தனைகளைப் பாடுவதிலும் தம் வாழ் நாளைக் கழித்து வந்தார். அவர் முத்துத்தாண்டவர் அருளிய 60 கீர்த்தனைகளையும் 25 பதங்களையும் உலகிற்குப் பிரசித்தம் செய்தவர். தாமும் கீர்த்தனை கள் இயற்றும் ஆற்றல் உடையவர். அந்தப் பரம்பரை யில் கி.பி. 1760-ல் தோன்றிய சேஷப் பிள்ளை திருப் பாம்புரநாதர் அருளால் தோன்றியவராய், சிவபூஜை, ஜபம் இவற்றில் காலம் கழித்து, வடமொழி, தமிழ் என்ற இரண்டிலும் வல்லவராய், ஆகமங்களையும் அறிந்து கும்பாபிஷேகம் முதலிய சிறப்புத் தொண்டு களை முன் நின்று நடத்திய பெருமைக் குரியவர். இம்மரபில் தோன்றிய குழந்தைவேல்பிள்ளை சாரிந்தா என்ற இசைக் கருவியையும். இவர் மகனார் சாமிநாதப் பிள்ளை வீணையையும் கொண்டு தெய்வத் திருப் பணியில் ஈடுபட்டவர்கள். இம்மரபில் தோன்றிய நடராச சுந்தரம், சிவசுப்பிரமணியம் என்ற சகோதரர்

இருவரும் இரட்டை நாயனத்தின் வாயிலாக இசைக் கலைக்குப் புத்துருவம் வழங்கி இரட்டை நாயனம் வாசித்தலைத் தமிழ்நாட்டில் பிரசித்தி அடையச்செய்த வர்கள். இவர்கள் தியாகராசர், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் ஆகியவர்கள் சாகித்தயத்தைப் பொருள்தெரிந்து உருக்கமாகப் பாடுவதில் வல்லவர் கள். நடராச சுந்தரத்தின் மூத்த மகனார் புல்லாங்குழல் சாமிநாதப் பிள்ளை (1898-1961) தம் காலத்தில் வாழ்ந்த இசைக் கலைஞர் அனைவராலும் பாராட்டப்பட்ட வர். இவருக்குச் சான்றோர்களால் வழங்கப்பட்ட விருதுகள் கணக்கில் அடங்கா. பிற்காலத்தில் பிரசித்த மாக விளங்கிய இசைக் கலைஞர் பலர் இவருடைய சீடர்களே. இவர் முத்துத் தாண்டவர். மாரிமுத்தாப் பிள்ளை முதலியோருடைய இசைப் பாடல்களைச் சுரதாளக் குறிப்புகளுடன் தமிழ் உலகிற்கு வழங்கித் தமிழிசையை வளர்த்தற்கு உதவிய சான்றோர்கள் வரிசையில் உள்ளவர். இவர் தம்பி சோமசுந்தரம் காலத்தில் தான் முதன் முதலாக நாதஸ்வரக் கல்லூரி தோற்றுவிக்கப்பட்டது. இவர் நாதஸ்வரக் கல்லூரியில் முதல்வராய்ப் பணியாற்றி நாதஸ்வரக் கலையை மாணவர்களுக்கு பயிற்றிடப் பாடத் திட்டங்களை வகுத்துத் தந்தார். சுவாமி மலை, பழனி முதலிய தேவ ஸ்தானங்கள் சார்பில் நாதஸ்வரக் கல்லூரிகள் நிறுவப் பட்டன. இவருடைய குமாரர் இசைப்பேரறிஞர் திருப்பாம்புரம் சோ. சண்முக சுந்தரம் அவர்கள் தமிழ் நாடு அரசு இசைக் கல்லூரியில் இயக்குனராகப் பணி புரிகிறார். இவரே மாவட்டந் தோறும் இசைப் பள்ளிகள் தோன்றிட வழிவகுத்து பாடத்திட்டம் அமைத்துத் தந்தவர். நடராஜ சுந்தரம் பிள்ளையின் மூன்றாம் மகனார் சிவசுப்பிரமணியம் பிள்ளை தமிழ் இசைக்குக் கீர்த்தனங்களைப் பிரபலம் ஆக்கித் தமிழிசைக்கு அருந் தொண்டு புரிந்து, தமிழிசைக் கீர்த்தனங் களைப் பதிப்பித்தற்குப் பெரிதும் உதவியவர். தமி ழிசைக்குப் பிரபலமாக இருக்கும் சான்றோர் பலரும் திருப்பாம்புரம் பரம்பரையின் சீடர்களே.

T.K.S. ஷண்முகசுந்தரம் பிள்ளையின் குமாரர் கள் இன்று திருப்பாம்புரம் சகோதரர்களாக விளங்கும் T.K.S. சுவாமிநாதன், T.K.S. மீனாட்சி சுந்தரம் ஆகி யோர் இந்த இசைப் பரம்பரையின் பெருமையைத் தொடர்ந்து நிலைநாட்டி வருபவர்கள். எனவே எட்டுத் தலைமுறைகளாக இறைவனுக்கு உகப்பான இசைக் கலையை வளர்த்துவரும் பெருமை இத் திருப்பாம் புரம் திருத்தலத்திற்கு அமைந்தது தனிச் சிறப்பாகும். திருப்பாம்புரம் என்றாலே இசைக்கலை அனை வருடைய நினைவிலும் இடம் பெறும். திருப்பாம்புர நாதர் அருளால் இம்மரபு தொடர்ந்து வரும் என்பதில் ஐயமில்லை.

### திருப்பாம்புரச் செய்திகள்

சைவத்திருமுறை நூலாகிய பெரிய புராணத் தில் திருஞானசம்பந்தரின் அருள் வரலாற்றை இயற்றும், தெய்வசேக்கிழார் இவ்வாறு கூறுகிறார்.

தக்க அந்தணர் மேவும் அப்பதியினில்
தான்தோன்றி மாடத்துச்
செக்கார்வார் சடை அண்ணலை பணிந்து
இசைச் செந்தமிழ்த் தொடை பாடி
மிக்க கோயில்கள் பிறவுடன் தொழுதுபோய்
மீயச்சூர் பணிந்து ஏத்திப்
பக்கம் பாரிடம் பரவ நின்று ஆடுவார்
பாம்புரநகர் சேர்ந்தார்.

சைவத்திருத்தலங்கள் தோறும் சென்று இறை வனை பணிந்து பாடும் சம்பந்தப் பெருமான் திரு மீயச்சூர் வந்து அங்கு இறைத் தொண்டாற்றியபின் அருகே உள்ள திருப்பாம்புரத்திற்கு வந்தார் என பெரிய புராணம் நமக்கு எடுத்துச் சொல்கிறது.

அரித்துவாரமங்கலம் சோமசுந்தர தேசிகர் சிவாலய மான்மியக் கோவை எனும் நூலை இயற்றி யுள்ளார். இது சைவத்தலங்களைப் பற்றிய செய்தி களை பாடல் வடிவில் சொல்லும் நூல், கருநிறம் கொண்ட காளகண்டேசன் எனும் பாம்பு இங்கு வழி பட்டு முக்தியடைந்ததாக திரும்பாம்புரத்தை பற்றிய செய்தி இந்நூலில் காணப்படுகிறது.

### கல்வெட்டுக்களில் திருப்பாம்புரச் செய்திகள்

இத்தலத்தில் இராசராசன், இராசேந்திரன், திரிபு வன வீரதேவன் மூன்றாம் குலோத்துங்கன், சுந்தர பாண்டியன் மற்றும் தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னர்கள் காலத்திய கல்வெட்டுக்கள் காணப்படு கின்றன. வறுமையால் வாடிய ஒரு வேளாளன் தன் இரு பெண்களை நூறு பொற்காசுகளுக்காக கோயிலுக்கு அடிமையாக்கியதாக ஒரு செய்தியும், இவ்வூர் குலோத் துங்க சோழ சதுர்வேதி மங்கலம் எனவும், உய்ய கொண்டார் வளநாட்டு திருப்பாம்புரம் என்று வழங்கப் பட்டதாக இன்னொரு செய்தியும் கூறுகிறது.

மூன்றாம் இராசராச தேவன் காலத்தில் அரச னுக்கு வரிகட்ட இயலாமற் போன ஒருவனுடைய வீட்டையும், நிலத்தையும் விற்று அரசு வரிப்பணத்தை சரி செய்தது கூறப்பட்டுள்ளது.

### ஆலய அமைப்பு

கிழக்கு நோக்கிய கம்பீரமான மூன்று நிலை யினையுடைய ராஜகோபுரம் நம்மை வாழ்த்தி வரவேற்கிறது. ராஜ கோபுரத்திற்கு எதிரே ஆதிசேஷ தீர்த்தம் உள்ளது. உள்ளே கொடி மரத்து விநாயகர்,

கொடி மரத்தின்கீழ் இருந்தபடி கிழக்கு நோக்கிய வண்ணம் அருளுகிறார். கொடிமரத்தோடு, பலீபீடம், நந்தியெம்பெருமான் ஆகியோர் காட்சி தருகின்றனர். (கொடி மரம் காலப்போக்கில் அழிந்து விட்டது) தெற்கு பிரகாரத்தில் திருமலை ஈசுவரன் எழுந்தருளியிருக்கும் மாடக்கோயில் காட்சியளிக்கிறது. இக்கோயிலின் கன்னி மூலையிலிருந்து பார்த்தால், சில காலமுன்பு வரை திருவீழிமிலை யெம்பெருமானின் மூலஸ்தான விமான கோபுரத்தை தரிசிக்கும் பேறு கிடைத்து வந்தது. தற்போது இடையே வளர்ந்துள்ள மரங்கள் விமான தரிசனத்தை மறைத்து விடுகின்றன. மேற்கு பிரகாரத்தின் கன்னி மூலையில் தல விநாயகராகிய இராசராச பிள்ளையார் அருள்கிறார். அடுத்ததாக வள்ளி தெய்வானை உடனுறை முருகப் பெருமானின் சன்னதி உள்ளது. வன்னி மரத்தடியில் ஆதி பாம்பு ரேசர் தனி சன்னதி கொண்டு எழுந்தருளி வழிபடும் அடியார்க்கு அருள் வழங்குகிறார். இவரது திருநாமம் வன்னீசுவரர் என வழங்கப்படுகிறது.

வடக்குப் பிரகாரத்தில் அதாவது சுவாமி சன்னதிக்கு இடப்புறமாக அமைந்துள்ள சன்னதியில் அம்மை, வண்டுசேர் குழலி எழுந்தருளியுள்ளார். சன்னதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது.

இப்பிரகாரத்தில் அமைந்துள்ள கருவறை ஆவரணத்தில் தட்சிணாமூர்த்திக்கு மேல் அருளும் சட்டநாதரின் வழிபாடு சிறப்பானதாகும். கிழக்குப் பிரகாரத்தில் அமைந்துள்ள தனி மண்டபத்தில், பைரவர், சூரியன், திருமால், பிரமன், பஞ்சலிங்கங்கள், ஆதிசேஷன், இராகு, கேது, சனீஸ்வரன், திருஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோரை தரிசிக்கலாம்.

## இனி நடுநாயகமாக விளங்கும் இறைவன் சன்னதி

இறைவன் சன்னதியானது மகா மண்டபம், அர்த்த மண்டபம், கருவறை என மூன்று பகுதிகளைக் கொண்டது. மகா மண்டபத்தில் உற்சவ மூர்த்திகளின் திருமேனிகள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. மகா மண்டபத்தின் தென்புறம் சோமாஸ்கந்தருக்கு தனி இடம் அமைந்துள்ளது. இம்மண்டபத்தில் நடராச ரும் நடம் பரிகிறார். பஞ்ச மூர்த்திகளின் தரிசனம் பரவசமாக்குகிறது. இங்குள்ள உற்சவத் திருமேனி களுள் முருகப் பெருமானின் திருமேனி அற்புதமானது. வள்ளி, தெய்வானையுடன் கூடிய பெருமான் வச்சிரத் தையும் வேலையும் தாங்கி இடக்காலால் மயிலை மிதித்தவாறு காட்சி தருகிறார்.

## சன்னதி சிறப்புகள்

இறைவன் சன்னதி, கருவறையில் பாம்பு ரேசுவரர் இலிங்க வடிவாய் இருந்தருளுகிறார். ஆதிசேடன் (உற்சவர்) ஈசனை தொழுதவண்ணம் கரு வறையில் எழுந்தருளியுள்ளார். இக்கருவறையை சுற் றிலும் அகழி உள்ளது. அகழியை மூடி மூன்று புறமும் மண்டபம் உள்ளது.

## அம்மன் சன்னதி

இறைவனை, மாதினை இடமா வைத்த எம் வள்ளல் என்று இத்தலத்து தேவாரம் போற்றுவதற் கேற்ப அம்மை, வண்டுசேர் குழலியின் சன்னதியும் இறைவனின் சன்னதிக்கு இடப்புறமாக வடக்கு பிரகாரத்தில் அமைந்துள்ளது. அம்மை ஒரு கையில் தாமரையும், ஒரு கையில் உருத்திராட்ச மாலையும் கொண்டு, வரத ஹஸ்தம், அபய ஹஸ்தம் விளங்க அருட்தோற்றமளிக்கிறார்.

## இராகு-கேது சன்னதி

ஏகசரீரமாகி, ஈசனை நெஞ்சில் இருத்தி, இராகு வும் கேதுவும் அருள்பெற்றார்கள் என்பது புராண வரலாறு. ஆதலின் இத்தலத்தில் உள்ள ஈசனையும் அம்மையையும் இராகு-கேதுவையும் வணங்கு வோர்க்கு பாபங்கள் தொலைகின்றன. நினைத்த காரியம் கைகூடுகிறது. இத்தனை சிறப்புக்கும் காரணமாக இராகுவும் கேதுவும் திருக்கோயில் ஈசான்ய மூலையில் தனிச் சன்னிதியில் எழுந்தருளியுள்ளனர். இராகு காலங் களில் இச்சன்னதியில் அபிஷேகம் அர்ச்சனை செய்வோர் தோஷங்களில் விலகி நலம் பெறுகின்றனர்.

## புராண வரலாறு

திருக்கயிலாயத்தில் ஒரு முறை விநாயகர் சிவனை வழிபட்ட போது அவர் கழுத்தில் இருந்த பாம்பு, விநாயகர் தன்னையும் வணங்குவதாக எண்ணி கர்வம் கொண்டது. அதனால் சினமுற்ற இறைவன் நாக இனம் முழுவதும் தன்சக்தியனைத்தும் இழக்க சாபமிட்டார். சாப விமோசனம் வேண்டி சர்ப்பங்கள் பல காலம் பல தலங்களில் பூசித்தும் பலனின்றி ஆதிசேடன் தலைமையில் அஷ்டமகா நாகங்களும் இத்தலம் வந்து பூசித்து சாப விமோசனம் பெற்றனர். அது முதல் இத்தலத்தில் பாம்பு தீண்டி யாரும் இறந்ததில்லை.

உலகை தாங்கும் ஆதிசேடன் அதன் சுமையால் உடல் நலிவுற்று ஈசனை தொழுதபோது அவர் மகா சிவராத்திரி அன்று இரவு குடந்தை, திருநாகேஸ்வரம், திருப்பாம்புரம், நாகூர் ஆகிய தலங்களில் தம்மை வழிபட்டால் நற்பயன் கிட்டும் என அருளினார். அவ்வாறே சிவராத்திரி மூன்றாம் சாமத்தில் இத்தலம்

வந்து ஆதிசேட தீர்த்தம் உண்டாக்கி நீராடி, அகத்தி பூவை ஆலம் விழுதால் தொடுத்து இறைவனை வணங்கி நலம் பெற்றார். அது முதல் இவ்வூரில் அகத்தி பூப்பதில்லை, ஆலம் விழுது தரையை தொடுவதில்லை.

இத்தலம் குடந்தை, திருநாகேஸ்வரம், நாகூர், கீழ்ப்பெரும்பள்ளம் மற்றும் காளகஸ்தி ஆகிய ஐந்து தலங்களின் பெருமை ஒருங்கே அமையப்பெற்ற தலம். ஈசனின் பஞ்சமுகங்களை குறிக்கும் வகையில் அமையப் பெற்ற பஞ்சலிங்கஸ்தலம். எனவே, இத்தலம் சர்வ தோஷ பரிகாரஸ்தலம் எனப் புராணங்கள் கூறுகின் றன. ஆதி சேஷனுக்கு உற்சவர் விக்ரஹம் உள்ளது. சோழவளநாட்டின் தேவாரப் பாடல் பெற்ற 190 திருத் தலங்களில் ஒன்றான இத்திருத்தலம் மூர்த்தி, தலம், தீர்த்தம் என மூன்றாலும் சிறப்பு பெற்றது.

ஸ்ரீ ராகு, கேது ஏக சரீரமாக நெஞ்சில் இறை வனை வைத்து வழிபட்டதால் ராகு, கேது ஸ்தலம் எனப்படுகிறது. அஷ்ட ஐஸ்வர்யங்கள் வேண்டு வோர் இத்தலத்தில் அர்த்த ஜாமத்தில் வில்வ இலை கொண்டு அர்ச்சித்து சுவாமிக்கு பசும்பால் நிவேதனம் செய்தால் நவக்கிரக சம்பந்தப்பட்ட சகல தோஷங் களும் நிவர்த்தியாகி நலம் பெறுவர்.

ஞாயிறு, செவ்வாய், வெள்ளி ஆகிய நாட் களில் மல்லிகை, தாழம்பூ மணம் வீசும் நேரங்களில் ஆலயத் திற்குள் எங்கேனும் ஓர் இடத்தில் பாம்பு நடமாட்டம் இருக்கும். அப்போது பாம்பு இறைவனை வழிபடுவதாக ஐதீகம்.

### வழிபட்டவர்கள்

ஆதிசேடன், அனந்தன், வாசுகி, தட்சகன், கார்க்கோடகன், சங்கபாலன், குளிகன், பத்மன், மகா பத்மன், காளகண்டேசன் எனும் பெயருடைய நாகங் கள். (அட்டமகா நாகங்கள் அடங்கலாக)

### செவிவழிச் செய்திகள்

கருவறையில் அவ்வப்போது நாகம் வந்து வணங்குவதாகவும், குறிப்பாக ஞாயிறு, செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் புண்ணியம் செய்தோர் நாக வழிபாட்டை கண்கூடாகவும் காணலாம் என்று கூறப் படுகிறது. மேலும் கோவிலுள் நாக நடமாட்டம் ஏற் படும்போது திடீரென்று, மல்லிகை, தாழம்பூ ஆகிய பூக்களின் நறுமணமும் வீசுகிறது. இவ்வூரில் இருக்கும் பாம்புகள் இறையடியாராக உலவிக் கொண்டிருப்ப தால் இன்றுவரை அவை யாரையும் தீண்டியதாக வரலாறு இல்லை அகத்திப்பூ பூப்பதில்லை, ஆலம் விழுது தரையை தொடுவதில்லை என்பதெல்லாம் வியப்பூட்டும் செய்திகள்.

### ஜோதிடச் செய்திகள்

### வழிபடும் முறை

ஏனைய திருக்கோயில்களில் இருப்பதைப் போல் ராகுவும், கேதுவும் தனியாக இராமல் இருவரும் ஏக சரீரமாக இருந்து வருவது இத்தலத்திற்கு இன் னொரு சிறப்பு. எனவே இங்கு வந்து வழிபடுவோர்க்கு

1. ஜாதகத்தில் கால சர்ப்ப தோஷம் இருந்தால்
2. 18 வருட ராகு தசா நடந்தால்
3. 7 வருட கேதுதசா நடந்தால்
4. லக்னத்துக்கு 2-ல் ராகுவோ, கேதுவோ இருந்து லக்னத்துக்கு 8-ல் கேதுவோ, ராகுவோ இருந்தால்
5. ராகுபுத்தி, கேதுபுத்தி நடந்தால்
6. களத்ர தோஷம் இருந்தால்
7. புத்ர தோஷம் இருந்தால்
8. ஆண், பெண் இருபாலருக்கும் திருமணம் தடைப் பட்டால்
9. கனவில் அடிக்கடி பாம்பு வந்தால்
10. தெரிந்தோ, தெரியாமலோ பாம்பை அடித்திருந் தால் இத்தலத்திற்கு சென்று பரிகாரம் செய்தல் அவசியம்.

அவ்வாறே 8-ம் இடத்தில் அமைவதால் ஏற் படும் இன்னல்கள், ராகு, கேது, புத்தி நடைபெறும் போது வரும் துன்பங்கள், களத்ர தோஷம், புத்ர தோஷம், திருமணத் தடை ஆகியன நீங்கி வளம் பெறுவர்.

இங்கு எழுந்தருளியிருக்கும் சுவாமி, அம்பாள் மற்றும் ஏகசரீர ராகு, கேது பகவானுக்கு அபிஷேகம் செய்விக்க வேண்டும். இராகு கேதுவுக்கு நீலம் மற்றும் பல வண்ண ஆடையை சாற்றவேண்டும். இயன்றால் கோமேதகம் மற்றும் வைடூரியம் அணிவிக்க வேண்டும். சங்குபுஷ்பம், மல்லிகை, நீலமந்தாரை, இலுப்பைப் பூ, செவ்வரளி, நாகலிங்கப்பூ ஆகியவை இராகு-கேது பகவானுக்கு பிடித்தவை. அர்ச்சனை முடிந்தபின் உளுத்தம் பருப்பு பொடி அன்னம் மற்றும் கொள்ளுப் பொடி அன்னம் நைவேத்தியம் செய்து தானம் செய்ய வேண்டும். எலுமிச்சைப் பழ மூடி தீபம் சிறந்தது. இவ்வாறு செய்வதால் முன் குறிப்பிட்ட துன்பங்கள் விலகுகின்றன.

### முக்கிய விழாக்கள்

சிவாலயங்களுக்குரிய ஏனைய விழாக்களோடு மகா சிவராத்திரி மிகவும் சிறப்பாக கொண்டாடப் படுகிறது. அதுவும் இத்தலத்தில் மூன்றாம் காலத்தில் ஆதி சேடன் வழிபட்டதால் 3-ம் கால பூஜை, மிக முக்கியமானது. ஆதி சேடனின் உற்சவ விக்ரக புறப்பாடு நடைபெற்று இறைவன் திருமுன்னர் வந்தபின் அபி ஷேக ஆராதனைகள் விமரிசையாக நடைபெறுகின்றன.

* * *

# "திருப்பாம்புரம்" - திருக்குட நீராட்டு விழா - ஓர் கண்ணோட்டம்

- டாக்டர் கயிலை சிவபார்வதி, எம்.ஏ., பி.எச்.டி.
முன்னாள் கல்லூரி கல்வி இயக்குநர், சென்னை.

பல்லாயிரம் கோடி ஆண்டுகளாக தனது ஆயிரம் தலைகளால் பூமியைச் சுமந்து வரும் ஆதிசேடன், தனக்கு உண்டான சோர்வுநீங்கவும், உடல் வலிமை பெறவும் வழிபட்ட திருத்தலம் ''திருப்பாம்புரம்'' என வழங்கப்படும் அருள்மிகு சேடபுரீசுவரர் ஆலயம் ஆகும்.

இத்திருத்தலம் கும்பகோணத்திலிருந்து காரைக்கால் மார்க்கத்தில் கற்கத்தி என்ற சிற்றூருக்கு அருகில் 2 கி.மீட்டர் தெற்கில் உள்ளது. மயிலாடுதுறையிலிருந்தும், பேரளத்தில் இருந்தும் ''திருப்பாம்புரம்'' செல்ல பேருந்து வசதி உள்ளது.

திருஞானசம்பந்த சுவாமிகள் இத்திருத்தலத்தை வழிபட்டு ''சீரணி திகழ்தரு மார்பில் வெண்ணூலர்'' எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடியுள்ளார்.

''பார்மலிந் தோங்கிப் பருமதில் சூழ்ந்த
பாம்புர நன்னக ராரைக்
கார்மலிந்து அழகார் கழனிசூழ் மாடக்
கழுமல முதுபதிக் கவுணி
நார்மலித் தோங்கு நான்மறை ஞான
சம்பந்தன் செந்தமிழ் வல்லார்
சீர்மலிந்து அழகார் செல்வம தோங்குச்
சிவனடி நண்ணுவர் தாமே''

எனத் திருப்பாம்புரத்தை வழிபட உண்டாகும் பலன்களைத் திருக்கடைக் காப்பில் வைத்துப் பாடியிருக்கக் காணுகின்றோம்.

ஆதிசேடன் வழிபட்டு தோஷம் நீங்கப்பெற்ற திருத்தலமான ''திருப்பாம்புரம்'', நாகதோஷம் தீர நாளும் பக்தர்கள் வந்து வழிபடும் பரிகாரத் திருத்தலமாகத் திகழ்ந்து வருகின்றது.


ஜாதகத்தில் காலசர்ப்பதோஷம் இருப்பவர்களும், 18 வருட ராகுதசாபுத்தி நடப்பவர்களும், 7 வருட கேது தசாபுத்தி நடப்பவர்களும், களத்ரதோஷம், புத்திர தோஷம் இருப்பவர்களும், திருமணம் தடைப்படும் ஆண், பெண் இருபாலரும் சாந்தி பரிகாரம் செய்து கொள்ள மிகவும் உகந்த திருத்தலம் அருள்மிகு வண்டுசேர்குழலி உடனுறை ஸ்ரீ சேஷபுரீஸ்வரர் திருத்தலம் ஆகும்.

தமிழிசைக் கல்லூரியின் இயக்குநர், இசைப் பேரறிஞர் ''திருப்பாம்புரம்'' டாக்டர் தி.சோ. சண்முக சுந்தரம் அவர்களை நான் கல்லூரிக் கல்வித் துறையின் இயக்குநராக இருந்த காலத்திலிருந்து - கடந்த 15 ஆண்டுகளாக நன்கு அறிவேன். அவர்களின் இளைய சகோதரர் திருமிகு நடராஜ சுந்தரம் அவர்களிடம் கடந்த ஒன்றரை வருடங்களாக எனக்கு அறிமுகம் ஏற்பட்டது.

இவ்வாறு திருப்பாம்புரத்துச் சகோதரர்களிடம் ஏற்பட்ட அறிமுகம் இரும்பைக் காந்தம் இழுத்தது போல் என்னையும் அறியாமல் ''திருப்பாம்புரம்'' திருத்தலத்துடன் என்னை ஒன்றவைத்து, 40 வருடங்களுக்குப் பிறகு நடைபெறும் அத்திருக்கோயில் திருப்பணியிலும் என்னை ஈடுபடுத்திய திருவருள் அற்புதத்தை எண்ணி எண்ணி நான் வியக்கின்றேன்.

என் பிறந்த நட்சத்திரம் திருவாதிரை. அதனால் நான் பிறந்த போதே ராகுதிசை நடக்கப் பிறந்திருக்கின்றேன். ராகு திசை நடக்கப் பிறந்ததனாலோ என்னவோ என்னுடைய 66-ஆவது வயதில் ராகு கேது பரிகாரத் தலமான ''திருப்பாம்புரம்'' திருத்தலத் திருப்பணியில் பங்குபெறக் கூடிய வாய்ப்பும், 11.9.2002 அன்று சிறப்புற நடைபெற்ற ''திருப்பாம்புரம்'' திருத்தலத் திருக்குட நீராட்டுவிழாவில் கலந்துகொண்டு புண்ணியம் பெறும் வாய்ப்பும் எனக்குக் கிட்டியது என்று நான் நம்புகிறேன்.

திருமிகு நடராஜ சுந்தரம் அவர்கள் சென்னை ராமகிருஷ்ணா மிஷன் மேல் நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்றுள்ளார். அவர் திருப்பாம்புரம் திருப்பணியில் பங்குபெறவும், திருப்பாம்புரம் திருத்தலம் தரிசிக்கவும் வருமாறு பலமுறை என்னை வற்புறுத்தியதன் பேரில்



2002-ஆம் ஆண்டில் ஜூன் மாதம் 29-ஆம் தேதி திருப்பனந்தாளில் ஸ்ரீகுமரகுருபரர், குருபூஜை விழாவில் கலந்து கொண்டு விட்டு, அதற்கு மறுநாள் ஜூன் மாதம் 30ஆம் தேதி நானும், களக்காடு இராமசீதா லட்சுமியும் இக் கோயிலுக்கு வந்தோம். முதல் நாள் குருபூஜை, அடுத்த நாள் திருப்பாம்புரத்தில் சிவபூஜை என எனக்குக் குருவருளும், குருவருளால் திருவருளும் கைகூடியது.

ஜூன்30-ஆம் தேதி திருப்பாம்புரம் திருக்கோயிலை நாங்கள் தரிசித்தபோது, இன்னும் இரண்டே மாதங்களில் எப்படித் திருப்பணிகள் எல்லாம் நிறைவேறி 11.9.2002 அன்று திருக்குட நீராட்டு விழா நடைபெறப் போகிறதோ என்ற மனக்கிலேசமே மிகுந்திருந்தது. அன்று இருந்த நிலை - திருக்கோயிலின் மதில்சுவர் ஒரு பக்கம் கட்டப்படவில்லை. இராஜகோபுரத் திருப்பணியும் பாதிதான் முடிந்திருந்தது. மற்ற கோபுரப் பணிகளும் நடைபெறவேண்டி இருந்தது. மடப்பள்ளி இடிந்து போயிருந்தது.

இவற்றின் திருப்பணிகள் எல்லாம் எப்படி நிறைவு பெறுமோ? காலம் மிகக் குறுகிய காலமாக இருக்கிறதே என்று அச்சப்பட்ட நிலையில் ''துணிந்த பின் மனமே துயரம் கொள்ளாதே'' ''எல்லாம் நல்ல படியாக நடந்து முடிவு பெறும்'' என்று என் உள்ளுணர்வு எனக்கு உணர்த்தியவாறு இருந்தது.

திருக்கோயில் செயல் அலுவலர் திருமிகு கவியரசு, பொருளாளர் திருமிகு துரைராசு, திருமிகு நடராச சுந்தரம் ஆகியோர் என் வீட்டிற்கு வந்தும், தொலைபேசியில் தொடர்புகொண்டும் திருப்பணி வேகமாக நடைபெறப் பம்பரமாகச் சுழன்று சுழன்று பணியாற்றினார்கள். மெய்யன்பர்கள் பலரும் திருப்பணிக் குழுவிற்கு முழுமையான ஒத்துழைப்பினை நல்கி, ''நாங்கள் இதைச் செய்து தருகிறோம், அதைச் செய்து தருகிறோம்'' என ஆளுக்கொரு பணிக்குப் பொறுப்பேற்றுக் கொண்டு ஆர்வமுடன் விரைந்து திருப்பணிகளை முடித்துத் தந்துவிட்டார்கள்.

யாகசாலை மற்றும் பந்தல் அமைப்பை வெகு நேர்த்தியாகச் செய்து முடித்ததற்காக செயல் அலுவலர் கவியரசு அவர்களையும், பொருளாளர் துரைராசு அவர்களையும் மனமாரப் பாராட்டவேண்டும்.

திருமிகு நடராஜ சுந்தரம் அவர்கள் காலில் சக்கரம் கட்டியதுபோல் ஓடி ஓடி பணிகளைச் செய்து கொண்டிருந்தார். நன்கொடையாளர் பலரிடமும் சென்று நன்கொடைகளைப் பெற்று அவர் திருப்பணிகளை முடுக்கியராவிட்டால் திருப்பணிகள் குறித்த காலத்தில் நிறைவு பெற்றிருக்காது, இதற்காக அவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

யாகசாலையில் ஆறுகாலப் பூசைகளும் மிக விசேடமாக நடைபெற்று முடிந்தது. இதில் கலந்து கொண்ட சிவாச்சாரியார்கள் அனைவரும் சர்வ சாதகம் கடகம்பாடி விசுவநாதகுருக்கள் மற்றும் ஆலங்

குடி கல்யாண குருக்களை மனமாரப் பாராட்ட வேண்டும்.

யாகசாலைக்குச் சிவாச்சாரியார்களை அமர்த்தியும், பெரும் பொருள் உதவி செய்தும் திருப்பணியில் பங்கு கொண்ட கோவையைச் சார்ந்த தொழில் அதிபர் திருவாளர் வசந்த குமார் மற்றும் அவருடைய துணைவியாரையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம்.

இசைப்பேரறிஞர் திருப்பாம்புரம் சண்முக சுந்தரம் குழுவினர் ஒவ்வொரு காலப் பூஜையிலும் தமிழ் இசைபாடி மெய்யன்பர்களை மகிழ்வித்தார்கள். திருவீழிமிழலை ஓதுவாமூர்த்திகள் தேவாரப் பாராயணம் செய்து மெய்யன்பர்களைப் பரவசப் படுத்தினார்.

ஐந்தாம்கால யாகபூஜை நடைபெற்ற பொழுது நடராஜ சுந்தரம் என்னிடம் வந்து நான் அம்பாளுக்கு சாற்றவைத்திருந்த பட்டுப் புடவையை யாகத்தீயில் இடுவதற்குக் கேட்டார்கள். நான் கொஞ்சம் தயங்கினேன். திருமிகு நடராஜ சுந்தரமும், ஜோதிடர் திருமிகு கணபதி கிருஷ்ணனும், திருமிகு கலியாண குருக்களும் ''பட்டுப்புடவையைப் பூர்ணாகுதியில் இடுவதே சாலச்சிறந்தது, பெரும் புண்ணியம்'' என்று கூறினார்கள்.

நான் அம்பாளுக்குச் சாற்றக்கொண்டு சென்றிருந்த பட்டுப்புடவை பூரணாகுதியில் இடப்பட்டதை அம்பாள் திருவருள் சித்தமாகவும், என்பெரும் பாக்கியமாகவும் கருதுகிறேன்.

தரும ஆதீனம் 26-ஆவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், திருவாவடுதுறை ஆதீனம் 23ஆவது குருமகாசந்நிதானம் சீர்வளர் சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், திருப்பனந்தாள் காசிமடம் அதிபர், கயிலை மாமுனிவர் சீர்வளர் சீர் காசிவாசி முத்துக் குமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள், காஞ்சிபுரம் தொண்டை மண்டல ஆதீனம் மெய்கண்டார் பீடம் 232ஆவது குருமகா சந்நிதானம் சீர்வளர்சீர் ஞானப் பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், மற்றும் சென்னை இராமகிருஷ்ண ஆஸ்ரமம் தவத்திரு சுவாமி பத்மஸ்தானந்தா ஆகியோர் முன்னிலையிலும் பல்லாயிரக்கணக்கான மெய்யன்பர்கள் முன்னிலையிலும் 11.9.2002 புதன் கிழமை காலை 7.15 மணிக்கு ''திருப்பாம்புரம்'' திருக்கோயில் அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகப் பெருவிழா மிகச் சிறப்பாக நிகழ்ந்தேறியது கண்கொள்ளாக் காட்சியாகும். ***

''திருக்கோயில் பொருந்த ஓர் செங்கல் இடுவார் உலகாள்வார்'' என்ற பழமொழிக்கு இணங்க, இத் திருப்பாம்புரம் திருக்கோயில் திருப்பணியில் பங்கு கொண்டு பொருள் உதவி, உடல் உழைப்பு நல்கி, இரவும் பகலும் அதே சிந்தனையாக இருந்து திருக் குட நீராட்டு விழா நிகழ்த்துவித்த ஆயிரக்கணக்கான மெய்யன்பர்கள் அனைருக்கும் என் வணக்கங்களைத் தெரிவித்து அவர்களை மனமாரப் பாராட்டுகின்றேன்.

தென்காசி விசுவநாதர் ஆலயத்தைக் கட்டுவித்த பராக்கிரம பாண்டியன் (கி.பி. 1411-1463) அக் கோயிலில் ஒரு கல்வெட்டில் திருப்பணியில் பங்கு கொண்ட அனைவருடைய திருவடிகளையும், தம் திருமுடிமேல் வைத்துப் போற்றுவதாக ஒரு கல்வெட்டுப் பாடலை எழுதிவைத்து உள்ளான்.

''யாராயினும் இந்தத் தென்காசி மேவும்
பொன் ஆலயத்து
வாராததோர் குற்றம் வந்தால் அப்போது
அங்கு வந்துஅதனை
நேராகவே ஒழித்துப் புரப்பார்களை நீதியுடன்
பாரோர் அறியப் பணிந்தேன் பராக்கிரமப்
பாண்டியனே''

''அரிகேசரிமன் பராக்கிரம மாறன் அரன்
அருளால்
பரிசேர் பொழில் அணி தென்காசிக் கோயில்
வகுத்துவலம்
புரிசேர் கடற்புவி போற்றவைத்தேன்; அன்பு
பூண்டு இதனைத்
திரிசேர் விளக்கெனக் காப்பார் பொற்பாதம்
என் சென்னியதே''

இக்கல்வெட்டுப் பாடலில் பராக்கிரமப் பாண்டியன் போற்றியுள்ளபடியே ''திருப்பாம்புரம்'' திருக்கோயில் திருப்பணியில் பங்குகொண்டு உடலாலும், பொருளாலும், உள்ளத்தாலும் உழைத்த அத்தனை மெய்யன்பர்களுக்கும் என் மனமார்ந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அனைவரும் திருப்பாம்புரம் வந்து அருள்மிகு வண்டுசேர் குழலி மேத ஸ்ரீ சேஷபுரீசுவரர் பொற்பாதங்கள் பணிந்து, தோஷங்கள் தீர்ந்து, சந்தோஷங்கள் சேர்ந்து இகபரசுகங்கள் யாவும் பெற்று வாழப் பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

தென்னாடு உடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி! போற்றி!

திருச்சிற்றம்பலம்

# ஸ்ரீ காஞ்சி காமாட்சி

- திருமதி இராஜேஸ்வரி விஸ்வநாதன்

ஆதியும் அவளே அந்தமும் அவளே
பாதியும் அவளே பரமும் அவளே
சோதியும் அவளே சொருபமும் அவளே
சேதியும் அவளே செய்வதும் அவளே

ஸ்ரீ காஞ்சி காமாட்சி அம்மனின் திருக்கோயில் சக்தி பீடங்களில் முதன்மையானது. இதை காமராஜ பீடம் என்றும் ஸ்ரீ காம கோடி பீடம் என்றும் போற்று வார்கள். இந்தச் சேத்திரத்தை சத்திய விரத சேத்திரம், பாஸ்கர சேத்திரம், தைஜஸ சேத்திரம், ஹரிஹர சேத்திரம், சக்தி சேத்திரம், மகா புண்ணியப் பிரதம சேத்திரம், கைலாயம், வைகுண்டம், ஸ்ரீ புரம் என்ற ஒன்பது நாமங்களால் சான்றோர்கள் புகழ்கின்றனர். இந்த காமராச பீடத்தில் வாக்பவ கூடத்தைப் பூஜித்தவர் ஹயக்ரீவர்.

காஞ்சி என்பதற்கு ஒட்டியாணம் என்று பொருள். பெண்களின் இடையில் அணியப்படும் அணிகலன். இந்தியாவிலுள்ள 51 சக்தி பீடங்களுள் ஒன்றான இது நாபி விழுந்த ஸ்தலமாகும்.

அன்னை ஸ்ரீ காமாட்சியின் உள்ளம் அன்பு பெருக்கு எடுக்கும் உள்ளம். அதனால்தான் அவள் எப்பொழுதும் தன் அருட்பார்வையினால் கருணையி னால் தன்னை நாடி வரும் அடியவர்களையும் பக்தர் களையும் காத்து ரட்சித்து, அவர்களுடைய எண்ணங் களை விருப்பங்களை நிறைவேற்றுகிறாள். குற்றம் புரிபவர்களைக் கூட அவர்கள் பிழைகளை உணர வைத்தும், தடுத்தாட்கொண்டும் காப்பாற்றி வரு கிறாள் அகிலத்தின் அன்னையான காஞ்சி காமாட்சி.

தேவி மாகாத்மியம் மார்க்கண்டேய புராணத் தில் காமாட்சி அன்னையின் லீலைகள் வருணிக்கப் பட்டு உள்ளன. ஸ்ரீ வித்யா மந்திரங்களால் உபாசிக்கப் பெறும் ஸ்ரீ லலிதா திரிபுர சுந்தரியின் பரிபூரண ஸ்வரூபிணியாகத் திகழ்வது அன்னை ஸ்ரீ காமாட்சி யின் மூல விக்ரகம் ஒன்றே என்று கருதப்படுகிறது.

காமம் என்றால் விருப்பம். அக்ஷி என்றால் பூர்த்தி. பக்தர்களின் - அடியவர்களின் விருப்பத்தை பூர்த்தி செய்பவள் ஆதலின் காமாட்சி என்று அழைக்கப் படுகிறாள்.

'கா' என்றால் சரசுவதி, கலைவாணி, 'மா' என்றால் இலக்குமி. கலைவாணி, இலக்குமி, இரு தேவியரையும், தம் கண்ணால் கடாக்ஷித்து அருளிய தால் காமாட்சி என்று புராணங்கள் போற்றுகின்றன.


''ஸ்சாமர ரமாவாணி ஸ்வய தக்ஷிண சேவிதா''

என்ற லலிதா சகஸ்ர நாமத்தின் வரிகளுக்கு ஏற்ப அன்னை ஸ்ரீ காமாட்சி தன் இரு புறமும் இலக்குமி தேவியும், சரசுவதி தேவியும், வெண்சாமரம் (கவரி) வீச அன்னை ஸ்ரீ காமாட்சி காஞ்சியில் வீற்றிருக்கிறாள்.

விருப்பம் (காமம்) மட்டுமல்லாமல் அதன் எல்லை (கோடி) யாகிய மோட்சத்தையும் (மோட்சம் - வீடு பேறு) தருவதால் அவளை காம கோடி காமாட்சி என்று போற்றுகிறார்கள்.

ஸ்ரீகாஞ்சி காமாட்சி தேவியே ஸ்ருஸ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோதானம், அனுக்கிரஹம் என்ற ஐந் தொழில்களுக்கும் மூலாதாரமாகத் திகழ்பவள். வேத ஆகம புராணங்களில் பராசக்தி என்று போற்றப்படு பவள். முனிவர்கள், யோகிகள், சித்தர்கள், ஆசாரியர் கள் போன்ற அருளாளர்கள் உள்ளங்களில் நிலைத் திருந்து அவர்கள் நலனில் அக்கரையோடு அருள் பாலிக்கும் அன்புடையவள். எனவே லலிதா சகஸ்ர நாமத்தில் சொல்லப்படுகிற 'ஸ்ரீ மாதா'' என்ற பெயரே பராசக்தியாகிய அன்னை ஸ்ரீ காமாட்சியைக் குறிப்ப தாகும்.

முன்னொரு காலத்தில் பிரமன் தனது வம்சத்தில் பிறந்து இறந்த அரக்கர்களுக்குத் தானே வரம் அருளி உதவும் பொருட்டு அன்னை காமாட்சியைத் துதித்து தவம் இருந்தான். அத்தவத்திற்கு கேடுவராமல் தடுக்க மது, கைடபர் என்ற இரு அரக்கர்களை அமர்த்தி யிருந்தான். அன்னை பராசக்தி, அசுரர்களை, விஷ்ணு ரூபம் கொண்டு அழித்திடவே அதிக கோபமுற்ற பிரமன் யார் எனக்கேட்க, விஷ்ணு ரூபிணி காமாட்சி, சிவரூபிணியாகத் தோன்றி அதுதான் காரணமெனக் கூற திரும்பிய பிரமன் சிவரூபிணியைக் கண்டான். திரும்பி விஷ்ணு மூர்த்தியைப் பார்க்க அவரையும் காணவில்லை. சிவ ரூபிணியையும் காணவில்லை. இரண்டுக்கும் இடைப்பட்ட பிலாகாசத்தில் ரூபிணி யாய் அன்னையும் மறைந்துவிட்டாள். அன்று முதல்



வாயு மூலையில் காட்டிய சிவரூபமானது ஆம்பரமா விருட்ச ரூபமாய் எக்காலத்திலும் அழிவில்லாமல் தோன்றி ஏகாம்பரமெனவும், அதுபோலவே அக்கினி மூலையில் காட்டிய விஷ்ணு மூர்த்தி ரூபமானது பிரமன் அசுவமேதஞ் செய்யத் தொடங்கிய காலத்தில் அந்த யாகா அக்னியில் திவ்ய தேஜசோடு தோன்றி வரத ராஜமூர்த்தி எனவும் இரண்டு ரூபமாகக் காட்டிய தல்லாததொரு சக்தியே அந்த இரண்டுக்கும் மத்தியில் உள்ள பிலாகாச (பிலாகாசம் = குகை) ஸ்தானத்தில் தோன்றி காமாட்சி எனவும் பிரகாசித்துக் கொண்டு விளங்குகின்றன.

கிருதயுகத்தில் துருவாச முனிவரும், திரேதா யுகத்தில் பரசுராமரும், துவாபர யுகத்தில் தௌம்ய முனிவரும், கலியுகத்தில் மூகசங்கரரும் அன்னை ஸ்ரீ காமாட்சியின் கருணையைப் போற்றிப் பரவியுள்ளனர்.

ஆதிபராசக்தியான காமாட்சி அனைத்து இடங்களிலும் நிறைந்திருந்து எல்லாமுமாய், எல்லாவற்றையும் காத்து ஆட்கொள்ளுபவளாய் இருக்கிறாள். காஞ்சியில் பிலகாச ரூபத்திலும், ஸ்ரீசக்கர வடிவத்திலும் நான்கு புஜங்களோடு காயத்திரி மண்டபத்தில் வீற்றிருக்கிறாள். ஆதிபராசக்தி கருணைமிக்க காமாட்சியாய் காஞ்சியில் அவதரித்த வரலாறு மிகவும் சிறப்பு வாய்ந்ததும், பிரஸித்தி பெற்றதும் ஆகும்.

முன்னொரு காலத்தில் பந்தகாசுரனின் கொடுமைகளும் அட்டகாசங்களும் தாங்கமாட்டாமல், தேவர்களும், முனிவர்களும் சிவசங்கரனைச் சென்று சரணடைந்தனர். சிவபெருமானும் அவர்களுக்கு காமகோடி பீடத்தின் பெருமையை உணர்த்தி அன்னை பராசக்தியை காஞ்சியில் பிலகாசத்தில் வணங்கச் சொல்லி அருளிச் செய்தார். அவர்களும் காஞ்சி சென்று காமகோடி பீடத்துக்கருகே உள்ள செண்பக மரத்தில் கிளி ரூபத்தில் வழிபட்டு வந்தனர். தேவமுனிவர்களின் வேண்டுதலுக்கிணங்க தேவி கைலாயத்தில் பந்தகாசுரன் நித்திரையில் இருப்பதை அறிந்து அவனது கண்டத்தில் ஒரு பாதத்தையும், மார்பில் மற்றொரு பாதத்தையும் வைத்து 18 புஜங்களும், 18 ஆயுதங்களும் கொண்டு பைரவ ரூபிணியாய்த் தோன்றி அவனது சிரசை அறுத்து, சிகையைப் பிடித்து அவன் தலையுடன் ஐந்து வயதுடைய கன்னிகையாய்க் காம கோடி பீடமாகிய பிலத்துவாரத்தை வந்தடைந்தாள். கோர ரூபிணியாய்க் காண பயப்படுவார்கள் என்று, சாந்த சொரூபிணியாய் அதிசுந்தர வடிவுகொண்டு மாற்றம் கொண்டாள். பந்தகாசுரனைப் புதைத்து அந்த இடத்தில் ஜெயஸ்தம்பத்தை நாட்டும் படி தேவர்களிடம் பணித்தாள்.

தேவர்கள் பள்ளம் தோண்டும் பொழுது அவ்விடத்தில் மல்லகன் என்னும் அசுரனைக் காணவே

தேவர்கள் மகா விஷ்ணுவின் உதவியை நாடினார்கள். உடன் மகாவிஷ்ணு வந்து அவனைத் தாக்கியபோது அவன் உடலிலிருந்து வந்த இரத்தத்துளிகள் எல்லாம் பிந்துவாகி அசுரர்கள் கூட்டம் கூட்டமாய்ப் பெருகினார்கள். மகாவிஷ்ணு சிவபிரானின் உதவியை நாட அவரும் இரண்டு பூதங்களை அனுப்பிவைத்தார். பூதங்களின் உதவியால் அவனை அழித்தபோதும், மகாவிஷ்ணுவுக்கும், பூதங்களுக்கும் அசுர வாடை அடிக்க, சண்டைபோட, மகாவிஷ்ணு பூதங்களை உள்ளே தள்ளி அதன்மேல் அமர்ந்து கொண்டார். அதனால் அவருக்கு பூதபந்தனன் என்ற நாமம் ஏற்படலாயிற்று. இவர்கள் சண்டையிட்டுக் கொண்டதனால் ஏற்பட்ட பாவத்தைப் போக்க ஸ்ரீகாரமாக, சிவபெருமான் தன் ஜடையில் உள்ள கங்கையைப் பெருகிவரச்செய்து பஞ்சதீர்த்தம் என்னும் அத்தீர்த்தத்தை ஏற்படுத்தி அதில் அவர்களை முழுகி வரச் செய்தார்.

திருமாலும் அந்த ஆண்பெண் இருபூதங்களை பஞ்சதீர்த்தம் காப்பவைகளாக பிரதிட்டை செய்தார். அவற்றின் மத்திய பாகத்தின் மேலிடத்தில் முன் பூதங்களுடன் சண்டையிட்ட போது நின்றும், இருந்தும் கிடந்தும் இருந்ததுபோல் மூன்று பேத ரூபங்களாக எழுந்தருளி, புத்திர பாக்கியத்தை வேண்டி பஞ்ச தீர்த்தத்தில் நீராடுபவர்களுக்கு புத்திர பாக்கியத்தை அளிக்க அனுக்கிரஹித்து அருள எழுந்தருளினார்.

தேவர்கள் பந்தகனைப் புதைத்த இடத்தில் கொடியாக ஜெயஸ்தம்பத்தை நாட்டி அவ்விடத்தினின்றும் பிலாகாசத்திற்கும் போக ஒரு துவாரம் அமைத்து, அதற்கு அருகாமையில் தெற்கில் பிலத்தின் வெளி எவ்வளவு உள்ளதோ அவ்வளவும் நாற் சதுரங்களாக அமைத்து அதில் காயத்திரியினுடைய வர்ணங்களையே இருபத்தி நான்கு கால்களாக நாட்டி காயத்திரி மண்டபம் என்று பெயரிட்டு அம்மண்டபத்துள் பிரணவத்தை ரத்ன சிம்மாசனமாக அமைத்து அப் பீடத்தின் மேல் கன்யா ரூபமாக இருந்த அம் பாளைப் போன்ற ஒரு பிம்பத்தைச் செய்து, ஆவாகித்து, ஆராதித்து கதவை மூடிவிட்டு வெளியே இருந்து சூரியோதயம் ஆகும்வரை ஜபித்திருந்தனர். அருணோதய காலத்தில் ஆசாரத்தோடு கதவைத் திறந்து பார்க்கும்போது தாங்கள் வைத்திருந்த விக்ரகத்திற்கு பதில் ராஜ ராஜேஸ்வரியாகிய திரிபுர சுந்தரி நிஜ ரூபத்தோடு ஆவிர்பவித்திருப்பதைக் கண்டு வியந்து போற்றி, துதித்து வணங்கி நின்றனர். அன்று ஸ்ரீலலிதாம்பிகை ஆவிர்பவித்த நாள் பங்குனி மாதம் பூர நட்சத்திரம் கூடிய சுக்கிர வார சுபதினமாகும்.

சிம்மாஸனத்தில் வீற்றிருக்கின்ற பரமேஸ்வரிக்குப் பட்டாபிஷேகம் செய்வதற்கு, விஸ்வகர்மா பல்லக்கையும், பிரமன் முத்துக் கொண்டையையும், நாராயணன் நவரத்ன மகுடமும், சிவபெருமான் ஸ்ரீசக்கரமெனும் பதக்கமும் கொடுக்க அம்பிகையை அலங்காரம் செய்து என்றும் காஞ்சியில் சான்னித்யமாக இருந்து அருள் பாலித்து வரவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். அதன்படியே இன்றும் ஸ்ரீ காஞ்சி காமாட்சி கருணையே வடிவமாய்க் கொண்டு பக்தர்களுக்கும் சித்தர்களுக்கும் அருள் பாலித்துக் கொண்டிருக்கிறாள்.

முன்னர் தேவர்கள் சண்முக அவதாரத்திற்காக, தவத்திலிருந்த சங்கரனை எழுப்ப, இறைவியை வேண்ட மன்மதனின் மலர் அம்புகளால் தாக்கப் பட்ட இறைவன் சிவபிரான் கௌரியைத் தேட எங்கும் காணாது ஸ்ரீ காஞ்சி வந்தடைகிறார். கௌரியை அணைக்க வந்தவரை தன்னால் முடியாதென்றும் மன்மதனையே சென்று வேண்டுங்கள் என்றும் கூறி விட்டார். எல்லா சக்திகளையும் ஒன்றாக ஆக்கி தன்னுள் கொண்டுவிட்டாள். பின் மன்மதனிடம் தோல்வியுற்றார் சிவன்.

அன்னை காமாட்சி பின்னர் தனது அம்சமான ஒரு சக்தியை அனுப்பிவைத்து சிவபிரானுக்காக, மற்ற சக்திகளை அந்தந்த இடத்திற்கு அனுப்பிவைத்தாள். மன்மதனின் புஷ்ப பாணங்களாகிய தாமரை; அசோகம், மா, மல்லிகை, நீலோத்பலம் என்று ஐந்துவகை மலர் அம்புகளையும், கரும்பு வில்லையும் தன்கையில் தரித்து காட்சி தந்ததினால் ''ஸோம பாணேசு கோதண்ட மண்டிதா'' என்று ஸ்ரீ காமாட்சி போற்றப்பெற்றாள்.

தன்னை துதிக்கும் பக்தர்களையும், முனிவர்களையும் மன்மதன் இடையூறு செய்யா வண்ணம் அவனுடைய பாணங்களையும், வில்லையும் வைத்துக் கொண்டு அவர்களைக் காப்பாற்றுகிறாள் என்று காஞ்சி காமகோடிப் பெரியவர் பரமாச்சாரியார் ஜகத்குரு ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் அழகாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

காமக்ரோதங்களிலிருந்து நம்மை காத்திடுகிறாள் அன்னை என்பதற்கு இந்த வரலாறு சான்றாகிறது. காஞ்சிபுரத்தில் சிவாலயங்களில் அம்பிகைக்குத் தனி சந்நிதி கிடையாது. எல்லா சக்திகளும் காமாட்சியிடத்தே கலந்திருப்பது தான் இதற்கு காரணமாகும். உற்சவ மூர்த்தி மட்டும் உண்டு. ஸ்ரீ காமாட்சியினின்று தோன்றிய சக்திஸ்ரூபிணிக்கும் ஸ்ரீ ஏகாம்பரநாதருக்கும் திருக்கல்யாணம் நடைபெற்றதை வைத்து ஸ்ரீ ஏகாம்பரேச பத்தினியாக போற்றுவது மரபாக உள்ளது.

காத்யாயணி காஞ்சியில் தவம் புரிந்து கொண்டிருந்த சமயம் திருவிளையாடல் புரிய நினைத்த சிவபெருமான் கங்கையை பெரும் வெள்ளமாக பெருக்கெடுத்து ஓடச் செய்ய, தவம் புரிந்து கொண்டிருந்த அம்பிகை காத்யாயணி 'கம்ப-கம்ப' (பயம் - பயம்) என்று நடுக்கமுற்றாள். எனவே இந்நதிக்கு கம்ப நதி என்ற பெயர் ஏற்பட்டது. அம்பிகை பிரளயத்தை தடுக்க தமது தோழியருள் ஒரு சக்தியை அந்த வெள்ளத்தைத் தடுக்க கட்டளையிட்டாள். அந்த சக்தி காளி ரூபமாய் அவ்வெள்ளத்தை எதிர்த்து நின்று தன் கையிலிருந்த கபாலத்தில் அப் பெரு வெள்ளத்தை உள்ளடக்கினாள். அதனால் அந்த சக்தி மகா பிரளய பந்திணி, பிரளயம் காத்த மாதா எனும் பெயர் பெற்றாள். சகோதரன் விஷ்ணு மூலம் இது சிவ லீலை என்று உணர்ந்து அம்பிகை தான் அமைத்த மண் லிங்கம் நீரில் கரைந்து போகாமலிருக்க தம் இரு கரத்தினாலும் அணை போல தடுத்து ஆலிங்கனம் செய்து தழுவினாள். காமாட்சியின் அம்சமாகிய ஏலவார் குழலி ஏகாம்பரேசுவரனை அடைந்ததால், திரு காமாட்சி அம்மை இடங்கொண்ட திருவேகம்பர நாதர் என்று இப்பெருமான் அழைக்கப்படுகின்றார்.

ஸ்ரீசங்கர பகவத் பாதாள் ஸ்ரீசக்கரப் பிரதிஷ்டை செய்தது மட்டும் அன்றி ஸ்ரீ சக்கரா காரமான ஸ்ரீ காமாட்சியின் ஆலயத்தையும், புதுப்பிக்கச் செய்து காஞ்சிபுரத்தை ஸ்ரீ சக்கர ரூபத்தில் மாற்றி அமைத்து அதன் பிந்துவாக காமகோட்டக் கருவறை அமைந்து இருக்கும்படி செய்து அங்கு சர்வக்ஞ பீடத்தை ஸ்தாபித்து பீடாரோஹணம் செய்தார். காமகோடி பீடாதிபதிகளுள் ஸ்ரீமுக சங்கரர் (இருபதாவது பீடாதிபதி) காமாட்சியம்மன் பெயரில் 500 ஸ்லோகங்களை (ஸ்ரீஸ்துதி) பாடியுள்ளார்.

இன்றும் காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ சங்கர ஆசார்ய ஸ்வாமிகள்தான் இத்திருக்கோயிலின் பரம்பரை தர்மகர்த்தாக்களாக இருந்து பரிபாலித்து வருவதோடு இவ்வாலயத்தின் காமாட்சி அம்பிகையை உலக நன்மைக்காக அநவரதமும் பிரார்த்தித்து வருகின்றனர்.

இத்திருக்கோயிலில் மூகர் ஊமையாக இருந்து அம்பிகையின் அருளால் பேசும் சக்தி பெற்றவர். இவர் போல எண்ணற்றோர் கவிபாடும் சக்தியையும் பெற்றிருக்கின்றனர். தண்டி, காளிதாஸ் போன்றோர்க்கும் அருளியவள் இவள் அன்றோ? இதயத்தின் உள்ளிருந்து சொல் வடிவில் வெளிவந்த, கீர்த்தியைத் தருவது அன்னையின் சக்தியே! சித்சக்தியாகிய அம்பிகை இதயத்தில் குடிகொண்டு இயக்கும் வரையில் அனைவரும் ஊமைகள்தானே!

நாவில் சரசுவதியாய், நல்வாக்கு நல்குபவள் ஸ்ரீ காஞ்சி காமாட்சி. சக்திபீடமாகிய திருவாரூரில் தோன்றிய மும்மூர்த்திகள், தியாகராஜஸ்வாமிகள், முத்துஸ்வாமி தீட்சதர், ஸ்ரீஸ்யாமா சாஸ்திரிகள் மூவரும் ஸ்ரீ காமாட்சியை மனமுருகிப் போற்றிப் பாடியிருக்கின்றனர். அன்னையின் கருணையை இவர்களது பாடல்கள் பறை சாற்றும்.

அன்னை காமாட்சியின் திருக்கோயில் நான்கு திசைகளிலும், நான்கு பெரிய கோபுரங்களுடனும் காண்பவரின் கண்கவரும் பெரிய கோயிலாகத் திகழ்கிறது.

ராஜகோபுரத்தின் வழியே மதிலைக் கடந்து உள்ளே சென்றதும் உயர்ந்த த்வஜஸ்தம்பமும் (கொடி மரம்) பலிபீடமும் காணப்படுகிறது. த்வஜஸ்தம்பத்திற்கு எதிரே சந்நிதி பிரகாரத்தில் ஜன்னல் அமைக்கப்பட்டு உள்ளது. சுவரில் உள்ள கல் ஜன்னல் வழியே பார்த்தால் உள்ளே காயத்திரி மண்டபத்தில் வீற்றிருக்கும் அன்னை ஸ்ரீ காமாட்சியைத் தரிசிக்கலாம். கொடிக் கம்பத்தின் கீழ் விநாயகர் எழுந்தருளியுள்ளார். கோபுர வாயிலைக் கடந்து உள்ளே சென்றதும், சுக்கிரவார மண்டபம் உள்ளது. உற்சவ மூர்த்தி வெள்ளிக்கிழமைகளில் இங்கு எழுந்தருளுவதால் இது சுக்கிர வாரமண்டபம் என்று அழைக்கப்படுகிறது. இங்கு தூணில் ஆஞ்சனேயர் பக்தர்களைக் கவர்ந்து இழுத்துக் கொண்டிருக்கிறார்.

சுக்கிரவார மண்டபத்தின் வழியாக பிரதான வாயிலைக் கடந்து உட்சென்றதும் ஜயஸ்தம்பம் இருக்கிறது. அதற்கு எதிரே உள்ள வாயில் வழியே உள்ளே சென்று இடப்புறம் திரும்பியதும் விக்ன நிவாரண கணபதியைத் தரிசிக்கலாம்.

உற்சவ காமாட்சி எழுந்தருளியிருக்கும் உற்சவ மண்டபத்தை பிரதட்சிணமாக சென்று சரசுவதி பங்காரு காமாட்சி அன்னபூரணி, சந்நிதிகளைத் தரிசித்து அம்பாள் சந்நிதியை வந்தடைவது வழக்கம். உற்சவ மண்டபத்தின் படிக்கட்டுகள் ஏறியதும் துர்வாச முனிவர் காட்சி தருகிறார். உற்சவ காமாட்சி அம்மன் சந்நிதிமுன் நின்று திரும்பி எதிரில் பார்த்தால் அன்னை காமாட்சி மிகவும் அழகாக காட்சியளிக்கிறாள். இங்கு ஓரத்தில் நின்று கம்பி சாளரத்தின் வழியாக மேலே பார்த்தால் தங்க விமானத்தில் காமாட்சி தரிசனம் கிடைக்கும்.

துண்டீர மகாராஜாவுக்கு என்று ஒரு தனி சந்நிதி உள்ளது. அவர் தியானத்தில் இருப்பதால் இங்கு செல்லும் பக்தர்கள் கைகட்டி வாய்மூடி செல்கிறார்கள். துண்டீரம் என்றால் தொண்டை மண்டலம். இங்கே சுவற்றில் சௌந்தர்ய லஹரி முழுவதும் மிக அழகாக எழுதப்பட்டு இருக்கிறது. பங்காரு காமாட்சியைக் கண்டு சந்நிதிகளைச் சுற்றி வரும்போது மேலே பார்த்தால் விமானத்தில் ஆதி சங்கரர் காட்சி தருகிறார்.

சந்திரன், தத்தாத்ரேயர், துர்வாசர் ஆகியோர் அம்பிகையைத் துதித்துப் பாடியுள்ளனர். சௌபாக்ய சிந்தாமணி எனும் ஆகம ரீதியில் அன்னை காமாட்சியை வழிபடும் விதத்தினை அருளிச் செய்தவர் துர்வாசர். துர்வாசரைக்ரோத பட்டாரகர் எனக்கூறுவர். துர்வாசர் சௌபாக்கிய சிந்தாமணி தந்திரப்படி செய்யும் பூஜையை ஏற்றுக் கொள்வதற்காக தேவியும் அவர் எதிரில் வீற்றுக் கொண்டிருக்கிறாள். இங்கு துர்வாசரை வணங்குவதால் க்ரோதம் நீங்கப் பெற்று மன அமைதி கிடைக்கிறது. ஸ்ரீ இலக்குமி தேவி ஒருபுறமும் ஸ்ரீ சரசுவதி தேவி மறுபுறமுமாக கவரி வீச ஜகன் நாயகி யாகிய காமாட்சி காட்சித் தருகிறாள். அங்கு மண்டபத் தில் நின்றபடியே மூலவிக்ரகக் காமாட்சியைத் தரிசிக்க முடிகிறது. பங்காரு காமாட்சி என்று புகழ்பெற்று விளங்கியவள் இங்கு எழுந்தருளியிருந்த ஸ்வர்ண காமாட்சியே. ஆதியில் பிரம்மாவினால் செய்விக்கப் பெற்ற ஸ்வர்ண விக்ரகம் இதுவே.

அந்நியர்கள் தாக்குதல் சமயம் இந்த ஸ்வர்ண காமாட்சி, ஸ்ரீ ஸ்யாமா சாஸ்திரிகளின் பெரியோர் களால் செஞ்சி, உடையார் பாளையம், திருவாரூர் வழியாக தஞ்சாவூருக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கே தஞ்சாவூரில் கோயிலொன்று அமைத்து அதில் பிரதிட்டை செய்யப்பட்டு பங்காரு காமாட்சி எனும் பெயரோடு புகழ்பெற்று விளங்குகின்றாள். தஞ்சா வூரில் உள்ள ஸ்ரீ பங்காரு காமாட்சியம்மன் ஆலயத் தையும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் பரம்பரை தர்ம கர்த்தாக்களாக இருந்து பரிபாலித்து வருகிறார்கள்.

முன்னர் ஸ்வர்ண காமாட்சி இருந்த இடத்தில் அம்பிகையின் திருவடிகள் பிரதிட்டை செய்த பீடம் உள்ளது. இந்தத் திருவடி சேவைக்குப்பின் உற்சவ மண்டபத்தை விட்டு இறங்கியதும் மூலஸ்தான நுழை வாயிலுக்கு எதிரே அன்னபூரணியின் சந்நிதி உள்ளது. அன்னபூரணியைத் தரிசித்து பின் மூலஸ்தானத்தை வந்தடைந்ததும் காயத்திரி மண்டபத்தில் வீற்றிருக்கும் காமாட்சியை தரிசித்து பக்தர்கள் தங்கள் பிறவிப் பயனை அடைகின்றனர். சந்நிதிக்குச் செல்லும் பொழுது சியாமளா சௌந்தர்ய லட்சுமி காட்சி தருகின்றனர்.

மூலஸ்தானத்தில் ஸ்ரீ காமாட்சி தேவி பிலாகாச மாகவும், தபஸ் காமாட்சியாகவும் சதுர்புஜங்களோடு அதாவது இடது மேல் கரத்தில் பாசத்துடனும், வலது மேல் கையில் அங்குசத்தோடும், இடது கீழ்கையில் கரும்பு வில்லுடனும், வலது கீழ் கையில் புஷ்ப பாணங்களோடும், ஸ்ரீ வித்யா லலிதா திரிபுரசுந்தரி ஸ்ரீ காமாட்சி தேவியாகக் காட்சியளிக்கிறாள்.

பத்துவிரல் மோதிரம் எத்தனை பிரகாசமது
பாடகந் தண்டை கொலுசும்
பச்சை வைடூரியம் இச்சையாய் இழைத்திட்ட
பாதச்சிலம் பினொலியும்
முத்து மூக்குத்தியும் ரத்தின பதக்கமும்
மோகன மாலையழகும்
முழுதும் வைடூரியம் புஷ்ப ராகத்தினால்
முடிந்திட்ட தாலியழகும்

என்று அம்பிகையின் அழகைப் போற்றும் வரிகள் மூலஸ்தானத்தின் நுழை வாயிலில் எழுதப்பட்டு இருக் கிறது. அழகான காஞ்சியில் புகழாக வாழ்ந்திடும் அம்மை காமாட்சி உமையே என்று பக்தர்களால் போற்றப்பட்டு வருகிறாள். மூலக் காமாட்சிக்கு வலப் புறம் தபஸ்காமாட்சி காட்சி தருகிறாள். ஸ்ரீ காமாட்சி யின் முன்பாக இருப்பது ஆதிசங்கரரால் பிரதிட்டை செய்யப்பட்ட ஸ்ரீ சக்கரமாகும். ஸ்ரீ சக்கரம் என்பது லலிதா திரிபுர சுந்தரியின் இருப்பிடமாகப் போற்றப் படும். ஸ்ரீ என்பது பரமப்ரக்ருதி சொரூபிணியாகிய பராசக்தியைக் குறிக்கும். வித்யா என்றால் ஞானம் அல்லது அறிவு.

ஸ்ரீ சக்கரத்தைச் சுற்றி அமைந்துள்ள கவசத் தில் அஷ்ட லட்சுமிகள் வீற்றிருந்து அருள் வழங்கு கிறார்கள். அன்னையின் குங்குமப் பிரசாதம் பெற்றதும் சந்நிதிக்குப் பக்கத்திலுள்ள அரூபலட்சுமியிடம் சமர் பித்து பின் குங்குமத்தை எடுத்து பக்தர்கள் நெற்றியில் இட்டுக் கொள்கிறார்கள். சந்நிதியில் வாராஹியும், சந்தான கணபதியும் எழுந்தருளி காட்சி தருகிறார்கள்.

ஸ்ரீ காமாட்சியம்மனை தரிசித்து காயத்திரி மண்டபம் வழியாக வெளியே வந்து அன்னபூரணி யம்மனை வலமாக வரும்போது ஸ்ரீ பூர்ண புஷ்கலா சமேத ஸ்ரீ தர்மசாஸ்தாவின் சந்நிதியைக் காணலாம். இந்த தர்ம சாஸ்தா, கோட்டக்காவல் புரியும் அய்யனார் கையினின்று ஒரு பூச்செண்டு வரம் பெற்று ஆதி சோழ சக்கரவர்த்தியான கரிகால் சோழன் மேரு மலை வரை யில் திக்விஜயம் செய்து சோழன் புலிக் கொடியை அங்கு நாட்டினான் என்று அங்கு எழுதப்பட்டு உள்ளது. அதையடுத்து இருப்பது ஆதிசங்கரரின் சந்நிதி. ஆதி சங்கரர் ஸர்வக்ஞ பீடாரோகணம் செய்திட்ட இடம் இதுவே. அன்னையின் அருள் பெற வருவோர்க்கு அறவழி காட்டி நெறிகாட்டி யாவரும் நல்வழி நடக்க வழிகாட்டுகிறார். இங்கே ஆதிசங்கரரின் வாழ்க்கை வரலாறு சந்நிதிக்குப் பக்கத்தில் உள்ள மண்டபத்தில் சித்தரிக்கப் பட்டுள்ளது. அங்கிருந்து வெளியே வந்ததும் கீழ்க்கோபுரத்தில் ஸ்ரீ பைரவர், ஸ்ரீ துர்க்கை சந்நிதி களைக் காணலாம். பிரகார பிரதட்சினமாக வருகை யில் காசி விசுவநாதர், சந்நிதி புஷ்கரணி, அதன் கரை யில் உள்ள நவராத்திரி மண்டபம் அதன் எதிரில் உள்ள கீழ்க் கோபுரத்தை ஒட்டியுள்ள யாகசாலை முதலிய வற்றையும் காணலாம். இத்திருக் கோயிலில் நாகசுப்பிர மணியருக்கு சந்நிதி உள்ளது.

காஞ்சியில் உள்ள எந்த திருக்கோயிலில் உற்சவம் நடந்தாலும் அந்தந்த உற்சவ மூர்த்திகள் ஸ்ரீ

# தியான அனுபவம்

- கவிஞர் சொ.பொ. சொக்கலிங்கம்

எங்கிருந்தோ வந்தமணம்,
என்னைச்சுற்றிச் சுற்றிவந்து,
தங்குதடை இல்லாமல்,
தனித்த பெரும் நறுமணமாய்ப்
பொங்கிவர, என் உணர்வும்,
புளங்காகிதம் அடையக்கண்டேன்,
இங்கு நிகழ்ந்த அற்புதத்தை
என்னவென்று எடுத்துரைப்பேன்? 1

இறைவன்வரும் சமயமெல்லாம்,
எதிர்பாரா நறுமணமும்
குறையின்றிப் பொங்கிவரும்,
குறிப்பதனைப் படித்ததுண்டு;
மறைஓதி தியானிப்போர்,
மனத்தில்வரும் நறுமணமும்,
குறையின்றிப் பொங்கிவரும்,
குறிப்பதனைக் கேட்டதுண்டு 2

இதுவரைக்கும் நானறியேன்,
இப்படிஓர் நறுமணத்தை,
மதுஉண்டோர் மயங்குவார்போல்,
மயங்கிநானும் மறுகினாலும்,
பதுமநிதி கிடைத்தவர்போல்,
பலமணிகள் திளைத்திருந்தேன்;
இதுவும்ஒரு இறைவன்வரும்,
இயல்பதனின் இறைமையாமோ? 3

இறையேஒரு பரிமளமே,
இதயம்வர சுகந்தம்வரும்;
இறைவன்ஒரு குறையில்லான்,
இனியமணம் குறையின்றி,
நிறைவோடு பொங்கிவரும்,
நிகழ்வதனை நான்உணர்ந்தேன்;
இறைவாநீ என்றென்றும்,
என்மனத்தின் நறுமணமே. 4

காமாட்சி ஆலயத்தை வலம் வரும் வண்ணம் ஊர்வலமாக வருவது வழக்கமாக உள்ளது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சிறப்பு ஆராதனைகள் உற்சவர் உலா வழிபாடு நடைபெறுகிறது.

ஒவ்வொரு பௌர்ணமி தோறும் நவாவர்ண பூஜை நடைபெறுகிறது. ஏறத்தாழ இரவு 1 மணி வரையில் செய்யப்படுகிறது.

1985-ஆம் ஆண்டு முதல் விஜயதசமியன்று ஸ்ரீ அம்பாளுக்கு தங்க ரதோத்ஸவமும், தங்க மலாம் பூசிய செப்பு கலசங்களால் தேவிக்கு ஸகஸ்ர ஸ்வர்ண கலசாபிஷேகமும் நடைபெறுகிறது. இத்திருக்கோயிலில் தினந்தோறும் நெய்தீப வழிபாடும் அன்னதானமும் நடை பெறுகிறது.

ஸ்ரீ ஏகாம்பர நாதர் என்று புகழப்பட்டு வருகின்ற ஸ்ரீ மகா காமேஸ்வர சொரூபிணியாயும், ஸ்ரீ புண்ணிய கோடியில் ஸ்ரீ வரதராஜர் என்று துதிக்கப்பட்டு வருகின்ற ஸ்ரீ மகா விஷ்ணு சொரூபிணியாயும், ஸ்ரீ காமகோடியில் பிலாகாச சொரூபிணியாயும், கன்னியா சொரூபிணியாயும் விசேடமாய்த் தன்னுடைய சமஸ்த ஆவரண சக்திகளுடன் யந்திர சொரூபிணியாயும் விளங்குபவள் அன்னை ஸ்ரீ காமாட்சி.

தூய பக்தியோடு தாயை தரிசிக்கிறவர்கள் இவ்வுலக மாயவலையினின்றும் மீண்டு, மோட்சம் பெறுவர். அன்னையாய் இருப்பதால் இவ்வுலக இல்லற வாழ்க்கைக்குத் தேவையான உணவு, உடை, வீடு வாசல், பொன், பொருள், கல்வி, கேள்வி எல்லாவற்றையும் பால் நினைத்தூட்டும் தாயினைப்போல அனைத்தையும், அனைத்து சமயங்களிலும், கருணைப் பார்வையோடு அளித்துக் கொண்டிருக்கிறாள். ஜகத் ஜனனி உலக நாயகி அன்னை ஸ்ரீ காஞ்சி காமாட்சியின் அருள், அவள் பார்வை பட்டாலே கிடைக்கும். நமக்கு வேண்டியதை நாம் கேட்காமலே தனயனின் தேவையறிந்த தாயைப்போல அன்னை ஸ்ரீ காமாட்சி தானாகவே அளிக்கிளாள். அவள் முன் நின்று அவளை வணங்கி திருவருளும், உறுபொருளும் பெறுவோமாக! அவளைத் துதிப்போர்க்கு வல்வினைகள் போகும், வரும் துன்பங்கள் போகும், எப்போதும் அவளை நெஞ்சில் நினைப்போர்க்கு பதிப்போர்க்கு எல்லா செல்வங்களும் வந்து சேரும். காஞ்சிக்குச் சென்றும், இங்கே இருந்தும், ஏன் எங்கு இருந்தும் அவளை வழிபட்டு வாழ்வின் பயனை அடைவோம் - வளங்கள் பல பெறுவோம்!

***

# மங்கலங்கள் தந்திடுவாள் மாங்காடு ஸ்ரீ காமாட்சி

- திருமதி உமா சுப்பிரமணியன், மடிப்பாக்கம்

மாங்காடு காமாட்சி
மண்ணெல்லாம் உன்னாட்சி
மலர் மாலை கொண்டு வந்தோம்
மனக் குறை தீருமம்மா

தாய் வீடு எங்களுக்கு
உன் வாசல் தானம்மா
நிம்மதியை தேடி வந்த
சேய் களை நீ பாரும் அம்மா!
(மாங்காடு)

குங்குமம் காப்பவளே
குல நலம் சேர்ப்பவளே
மங்கல வாழ்வளிக்க
மாங்காடு வந்தவளே!

தேடி வந்த மனங்களிலே
உள்ள குறை கோடியம்மா
வாசலுக்கு வந்துவிட்டோம்
வாஞ்சையுடன் பாரும் அம்மா (மாங்காடு)

எலுமிச்சை பழவடிவில்
எங்கள்வீடு வருபவளே
மடிப்பிச்சை கேட்கின்றோம்
மங்கல வாழ்வளிப்பாய்

ஆறு வாரம் உன்னை வேண்டி
ஆர வாரம் எதுமின்றி
ஆறுபோல ஓடி வந்தோம்
ஆதரிப்பாய் தேவியம்மா! (மாங்காடு)

முதல் வாரம் வந்த போது
முழு குறையும் சொன்னேனம்மா
மனமுருகி அழுதுவிட்டு
உன் நினைவில் சென்றேனம்மா!

'இரண்டாம்' வாரம் வந்த போது
ஏதோ கொஞ்சம் அமைதியம்மா
அன்பாய் என்னை காப்பவளே
உன்னை நம்பி சென்றேனம்மா!

"மூன்றாம்" வாரம் வந்தபோது
மாற்றங்கள் கண்டேனம்மா
வேண்டி வந்த விஷயத்திலே
ஏற்றங்கள் தந்தாயம்மா!

நாலாம் வாரம் வந்த போது
நன்மை பல சேர்த்தாயம்மா
நம்பி வந்த என் மனதில்
தெம்பு தந்த தேவியம்மா!

ஐந்தாம் வாரம் வந்த போது
ஐயங்கள் தீர்ந்ததம்மா
கேட்ட வரம் கேட்டபடி
ஆனந்தமாய் பெற்றேனம்மா!

ஆறாம் வாரம் வந்த போது
ஆறாய் ஆனந்த கண்ணீரம்மா
கேட்ட தெல்லாம் கொடுத்தவளே
நன்றி மறக்க மாட்டேனம்மா.
(மாங்காடு)

***

# காரைக்கால் அம்மையாரின் புனிதப் பயணம்...

- அருள்நிதி எஸ். மணிமாறன்

''மயிலைப் புறம்கொள் மென்சாயல்
மகளிர் கிளவி யாழினொடும்
குயிலைப் பொருவும் காரைக்கால்
அம்மை பெருமை கூறுவாம்''

என அன்னைக் காரைக்கால் அம்மையாரின் அருமைப் பெருமைகளை சேக்கிழார்பிரான் - செவிக்கினியச் செய்தியாக நமக்கு செப்பேட்டு எழுத்துக்களாய் தரு கிறார். சுமார் 1500 ஆண்டுகளுக்குமுன் கயிலாய ஈசனையே உயிராக நினைந்து;

''அன்பும் அறனும் உடைத்தாயின், இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது''

எனும் வள்ளுவரின் வாக்குப்படி இல்லறத்திலிருந்து கொண்டே இறைபக்தி, அடியார் பேணல் ஆகிய வற்றைப் பயனுறச் செய்து கொண்டிருந்தபோது துறவு நிலைக்குத் தள்ளப்பட்ட பெண்மணி நம் நெஞ்சை நெகிழவைக்கும் காரைக்கால் அம்மையார். அப்பேறு பெற்ற மங்கையின் வாழ்க்கைக் கடலில் ஒரு சூறாவளிக் காற்று சுழன்றடித்ததை நாம் மறக்க முடியாது.

வங்கம்மலி கடல்சூழ்ந்த காரைக்காலின் கண் வாழ்கின்ற வணிகர் குலத்தலைவன் தனதத்தன் அருந் தவத்தால் பொங்கியபேர் அழகுமிகுந்த திருமடந்தை யென நம்சிந்தையில் குடிகொண்ட சுந்தரதேவி புனித வதியார் அவதரித்தார்.

அன்னையாரின் அழகினை இளம்பிராயம் முதல் திருமணப்பருவம் வரை செந்தமிழ்ச் செல்வர் சேக்கிழார்பிரான் வானளாவப் புகழ்ந்துப் பாடியுள்ளார்.

''அணிகிளர்மெல் அடிதளர்வுற்று அசையும்
நடை பருவத்தே''

என அன்னை, நடைபயின்றதை நம் கண்முன்னே காட்சியாகக் கொண்டுவருகிறார். ''பல்பெருநல் கிளை உவப்பப் பயில்பருவச் சிறப்பு எல்லாம்'' என்று உற்றார் உறவினர்களனைவரும் மகிழ்ந்து பாராட்டும் விதமாக சிவபிரானிடம் சீரிய அன்பும், பெருகும் பக்தியும் கொண்டு அழகின் கொழுந்து எழுவதுபோல் வளர்ந்து வருகிறார் எனவும், விளையாட்டுப்பருவத் தில் தன்னுடன் பழகும் தாதியரும் போற்ற தழைத்தார் எனவும்,

''நல்லவென உறுப்புநூ லவர் உரைக்கும் நலம் நிரப்பி
மல்பெரு வனப்புமீக் கூர, வருமாட்சியினால்''



என்று அம்மையாரின் இளமை வனப்பு சாமுத்திரிக இலக்கண நூல் வல்லுனர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல் அமைந்துள்ளது எனவும்; ஒழுகி அழகு ஒளி வீசி மணப்பருவம் எய்தினார் எனவும் இயம்புகின்றார்.

கத்துக்கடல் சூழ் நாகையைச் சேர்ந்த நிதிபதி எனும் பெருவணிகனின் திருமகன் பரமதத்தன் என் பாருக்கு சுற்றமும் களிகூர்ந்து தளிர் அடிமென் நகை மயிலை' மணம் முடித்து வைத்தனர்.

பிரியமுள்ள மகளைப் பிரிய மனமின்றி தன் மாளிகையருகிலேயே ஓர் அழகிய இல்லம் அமைத்து வரம்புஇல் தனம் கொடுத்து, தந்தை தனதத்தனார் தனதருகிலேயே குடிவைத்தார். அன்னையாரும் தன் மணாளனோடு அளவில் மிகு மகிழ்வெய்தி மனம் போல் இல்லறத்தை நல்லறமாக

''துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை''

எனும் வள்ளுவரின் வழிநின்று மனைக்கு வரும் சிவ னடியார்களுக்கு அமுதூட்டிப் பொன்னும் பொருளும் கொடுத்து இனிது நடத்தி வந்தார்.

ஒரு நாள் பரமதத்தனைக் காணவந்த ஒருவர் இரண்டு மாங்கனிகள் கொடுக்க அவைகளை இல் லிற்கு அனுப்பிவைத்தான். இந்நிலையில்

''பணஅரவம் புனைந்தருளும் பரமனார்
திருத்தொண்டர்
உணவின்மிகு வேட்கையினால் ஒருவர்
மனையுள் புகுந்தார்.''

கறியமுது சமைக்கப்படாமலிருந்த காரணத்தினால் உணவருந்த வருகைபுரிந்த சிவனடியார்க்கு கணவன் அனுப்பிய மாங்கனிகளில் ஒன்றைக் கொண்டு வந்து படைத்தார். அவர் உணவருந்திய பின் அவருடைய ஆசிபெற்று அனுப்பிவைத்தார். பின்பு பகலுணவு ஏற்கவந்த பரமதத்தனுக்கு கறியமுதோடு மற்றொரு மாங்கனியும் படைத்தார். அஃது அதிக சுவையாய் இருந்தலால் மற்றுமொரு கனியையும் கொண்டுவா என்றான்.

பண்புநெறி குன்றிய பரமதத்தன், கனி அதிக சுவையாதலால் மற்றுமொரு கனியைக் கேட்டது தவறாகும். மற்றொன்று நாயகிக்கு உரியதென அவன் எண்ணுதல் வேண்டும். இனிமையைத் தான் மட்டும் நுகர விரும்பியதில் தன்னலம் தலைத்தூக்கியது. தான் நுகரும் இனிமையை நாயகியும் அனுபவிக்க வேண்டுமென நாயகன் நினைப்பதே தருமமாகும். நாயகனும் நாயகியும் ஓராவிற்கு இருகோடு பூத்தாற் போன்றவராதலால் பரமதத்தனின் இச்செயல் கண்டிக்கத்தக்கதொன்றாகும்.

அருள்நெறி நிரம்பிய அம்மையார், சிவனருளால் ஒரு மாங்கனியைக் கையகத்தே பெற்று கணவனுக்குப் படைத்தார். அதனையுமருந்திய கணவன் அத்துடன் நில்லாது இது நான் அனுப்பிய கனி அன்று எனத் தெரிகிறது, இதனை மூவுலகிலும் பெறுதலரிது, இத்தகைய ஒன்றினை எங்கே பெற்றாய்? என விளம்ப, கற்பு நெறி குன்றாக் குணக்குன்று நடந்தவையை உள்ளபடியே - எடுத்துரைத்தார். பரமதத்தன் திருவருள் நெறியில் நில்லாதவனாதலால் அவனுக்கு உண்மை விளங்கவில்லை. சிவனருளாயின் இன்னுமொரு கனி கொண்டுவா பார்ப்போம் என ஏகடியம் செய்தான். கணப்பொழுது சிந்தித்த கற்பரசியார், சிவனை வேண்டி நிற்க, மீண்டும் ஒரு மாங்கனி வந்தது. அதனைக் கணவனின் கையில் வைத்தார். அதிசயித்து வாங்கினான். கலக்கமிகு மனங்கொண்டான் கையில் அது நில்லாது மின்னி மறைந்தது.

''வணிகனும் தன்கைப் புக்க
மாங்கனி பின்னைக் காணான்
தணிவு அரும் பயம்மேல் கொள்ள
உள்ளமும் தடுமாறு எய்தி
அணிகுழ லவரை வேறுஓர்
அணங்குஎனக் கருதி நீங்கும்
துணிவு கொண்டு எவர்க்கும் சொல்லான்
தொடர்வின்றி ஒழுகும் நாளில்''

மரக்கலம் அமைத்து வணிகத்திற்குச் செல்வதாக ஒரு கபட நாடகம் நடத்தி விட்டு பாண்டிய நாடு நோக்கிச் சென்றுவிட்டான். அங்கே ஒரு வாணிபப் பெண்ணை மணந்து ஒரு பெண் குழந்தையும் பெற்றுவிட்டான். கணவன் வருவான் எனக் காத்திருந்த கற்புக்கரசியின் உணர்வுகளையும் கொன்றுவிட்டான்.

பரமதத்தன் பாண்டிய நாட்டிலிருப்பதை அம்மையாரின் சுற்றத்தார் அறிந்து அவரைக் கணவனிடம் சேர்க்க வேண்டுமெனக் கருதி ஒரு சிவிகையிலேறி அங்கு அடைந்தனர். செய்தியறிந்த பரமதத்தன் மனைவியுடனும் மகனுடனும் விரைந்து வந்து அம்மையாரின் காலில் விழுந்து தொழுதான். அச்சமுற்ற அம்மையார் விலகி நின்றார். சுற்றத்தார் நாணி ஒதுங்கினர். என்ன இதுவெனக் கேட்க; இவர் மானிடர் அல்லர், இவர் தெய்வம், அதனால் இவரைப் பிரிந்தேன் என விளக்கினான்.

அம்மி மிதித்து அருந்ததி பார்த்து அக்னி சாட்சியாக ஊராரும் உறவினருமறிய மங்கல நாண் பூட்டிய மணாளன் தன்னை ஒதுக்கிவிட்டானே என வேரறுந்த கொடிபோல் வெதும்பிய அம்மையார் இந்த உடலும் வேண்டா, அதனழகும் வேண்டாமென ஒரு மனப்பட்டு சிவனை சிந்தையில் ஏற்றி உருகினார்.

''வானமும் மண்ணும் எல்லாம்
வணங்குபேய் வடிவம் ஆனார்''

தெய்வத் திருவருளால் அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை மலர்ந்தது. கயிலாயம் நோக்கி நடந்தார்; திருக்கயிலையை அணுகினார்; திருமலை மீதேறினார்; காலால் நடத்தலைத் தவிர்த்து தலையால் நடந்தார்; மலை மீதேறினார். இதனைக் கண்ணுற்ற சிலைநுதல் இமயவல்லி அதிசயித்துச் சிவபெருமானைப் பார்த்து, ''இங்கே தலையால் நடந்து வரும் என்புடலின் அன்பு என்னே!'' என்றார். உமையே, இப்பெருமை சேர் வடிவம் எம்மை வேண்டி பெற்றனள் என்று அருகில் வந்ததும் ''அம்மையே'' எனும் செம்மை மொழியிலழைத்தார், சிவனார். அம்மையே என்றதும் ''அப்பா'' என மறுமொழி மலர்ந்து பொற்பாதம் பணிந்தார் நம்மால் இங்கு வேண்டுவது என்ன எனக் கயிலாதிபதி வினவ:

''இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும், மீண்டும்
பிறப்பு உண்டேல் உம்மை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ ஆடும் போது உன்
அடியின்கீழ் இருக்க என்று''

மனமுருகி கண்ணீர் மல்கி கையேந்தி நின்றார். அம்மையாரின் வேண்டுகோளை இறைவன் ஏற்று 'திருவாலங்காடு வருக' என்றார். ஆங்கே கொங்கை திரங்கி, எனத் தொடங்கும் மூத்தத் திருப்பதிகம் பாடினார். ஆண்டவன் ஆனந்தக் கூத்தாடினார். அம்மையார் இறைவனடி சேர்ந்தார். இறவாப் புகழ் எய்தினார்.

# சிவப் பரம்பொருளின் வடிவங்கள்

- டாக்டர் சிவப்பிரியா,
தில்லிப் பல்கலைக்கழகம்

எல்லாவற்றையும் கடந்து உள்ளதே கடவுள். தோற்றம், பிறப்பு, அவதாரம், பல்வேறுபாடு உருவம் அருவம் என எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டு இன்னது என்று சுட்டிக்கூறமுடியாத வகையில் எல்லாவற்றையும் கடந்து உள்ள செம்பொருளே கடவுள் எனப்பட்டது.

"அப்பாலைக்கு அப்பாலைப் பாடுதும் காண்" என்று ஓங்காரம் உணர்ந்தவரும், நந்திதேவரின் அவதாரமுமான மாணிக்க வாசகர் கூறுகின்றார். யான் எனது என்ற உணர்வாகிய ஆணவ மலம், பாவம் புண்ணியம் என்ற இருவினைகளான கர்மபலன், பிறவி என்னும் பேதமையாகிய மாயை ஆகிய மாசுகள் எவற்றாலும் தீண்ட முடியாத சிறந்த செம்பொருளாக இருப்பதால் சிவம் எனப்பட்டது. சிவம் என்றால் செம்மை, செம்பொருள் என்று அர்த்தம்.

பிறப்பு என்னும் பேதமை நீங்கச் சிறப்பு என்னும்
செம்பொருள் காண்பது அறிவு

என்று தூய்மையான சிவத்தைத் திருவள்ளுவர் கூறுகின்றார். தமிழர்களின் மிக உச்ச நிலை அடைந்த சைவ சித்தாந்த இறைநிலையைக் காட்டும் கடவுள் என்ற அற்புதமான சொல்லுக்கு இணையான சொல் உலகில் எந்த மொழியிலும் இல்லை. கடவுள் எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டு உள்ள உயர்ந்த பொருளானதால் பரம்பொருள் எனப்பட்டது. பிறவி அவதாரம் போன்ற மாசுகள் இல்லாத தூய செம்பொருளாக இருப்பதால் சிவம் எனப்பட்டது. பரம்பொருள் தன்மையிலிருந்தும் செம்பொருள் நிலையிலிருந்தும் மாறுதல் இல்லாமல் எப்போதும் சதா சர்வ நேரமும் பரம்பொருளாகவும் செம்பொருளாகவும் இருப்பதால் பரமசிவம் என்றும் சதாசிவம் என்றும் அமைக்கப்படுகின்றது.

எல்லாவற்றையும் கடந்துள்ள செம்பொருளான பரமசிவம் உயிர்களின் நன்மைக்காக வெளிப்படும் போதும் ஆண் என்றோ பெண் என்றோ இருபால் (அலி) என்றோ கட்டியறிய முடியாத எல்லாம் கடந்த கடவுள் நிலையிலேயே உள்ளது. இன்னது என்று கட்டிக்கூற முடியாமல் உள்ள எல்லாம் கடந்த கடவுள் வடிவமே சிவலிங்கம். அடிமுடியில்லாத, உறுப்பு எதுவும் இல்லாத, இன்னது என்று கட்டிக் கூறமுடியாத சிவலிங்க வடிவை

"ஆணல்லை பெண்ணல்லை பேடும் அல்லை"
"பெண்டிர் ஆண் அலி என்று அறியொண்கிலை"
"கண்ணின்றி காணும் செவியின்றி கேட்கும்"


என்று தெய்வீக நூல்களான தேவார, திருவாசக, திருமந்திரத் திருமுறைகள் போற்றுகின்றன. ஆண் என்றோ பெண் என்றோ அலி என்றோ கட்டிக் கூறப்படுபவையெல்லாம் ஜீவராசிகள். இந்த உயிரினங்கள் அனைத்தும் தெய்வங்கள் முதல் தாவரங்கள் வரை எண்பத்து நான்கு லட்சம் வகைகளாக உள்ளன.

"புல்லாகிப் பூடாய் ....... தேவராய்"
"எண்பத்து நான்கு நூறாயிரம் யோனிபேதம்
நிறை சேரப் படைத்து அவற்றின்
உயிர்க்கு உயிராய் அங்கங்கே நின்றான்."

என்று உயிரினங்களின் எண்ணிக்கையையும் வகைகளையும் பரம்பொருளை நேரில் கண்டு பாடிய மாணிக்கவாசகரும் திருஞானசம்பந்தரும் கூறுகின்றனர்.

தோற்றம், பிறப்பு, அவதாரம், வளர்ப்பு, பால் வேறுபாடு இல்லாமல் இன்னது என்று கட்டிக் கூற முடியாமல் எல்லாவற்றையும் கடந்து உள்ள பரமசிவம் தெய்வங்கள் முதல் தாவரம் வரையுள்ள உயிரினங்களின் அறிவிற்குப் புரியும் வகையில் வெளிப்படும்போதும் இன்னது என்று ஒன்றில் அடக்கிக்கூற முடியாதவாறு ஆணாக, பெண்ணாக, இருபாலாக, பாலற்ற பொருளாக என எல்லா வடிவங்களுடனும் எல்லா உருவங்களுடனும் எல்லாமாக வெளிப்பட்டு அருள்புரிகின்றது.

"பெண் ஆண் அலி எனும் பெற்றியன் காண்க"
"கண்ணால் யானும் கண்டேன் காண்க"



"பலவாய வேடங்கள் ஆனார்தாமே"
"பலப்பல வேடமாகும் பரன்"
வேறு வேறு உருவும் வேறுவேறு இயற்கையும்
"நூறு நூறாயிரம் இயல்பினதாகி"

என்று இன்னது என்று சுட்டிக் கூற முடியாமல் கோடானு கோடி வடிவங்களைக் கொண்ட கடவுளை ஓங்கார ஞானத் திருவாசகமும் தமிழ் காத்த இன்னிசைத் தேவாரமும் காட்டுகின்றன.

அன்பிற்கும் குடும்ப வாழ்க்கைக்கும் ஆதாரமான உமாமகேஸ்வரன், இயக்கத்திற்கும் ஓசையொலிக்கும் ஆதாரமான நடராஜர், அமைதிக்கும் அசையாத நிலைத்த தன்மைக்கும் ஆதாரமான தட்சிணாமூர்த்தி, அறங்களை வாழ்வித்த நந்தி வாகனன் ஆகியவையெல்லாம் பரமசிவத்தின் ஆண்பால் வடிவங்கள், தாயுமானவன் என்பது பெண்பால் வடிவம். ஈஸ்வரன், சங்கரன், சம்பு, பைரவன் போன்ற பெயர்களின் பெண்பாலான ஈஸ்வரி, சங்கரி, சாம்பவி, பைரவி போன்றவையெல்லாம் பரமசிவத்தின் பெண்பால் வடிவமான தாயுமான சுவாமியைக் குறிக்கும் திருப்பெயர்களாகும். தோடுடைய செவியன், மாதுபாதியன், அம்மையப்பன் என்பது ஆணும் பெண்ணும் கலந்த இருபால் அல்லது அலி வடிவமாகும். நிலம், நீர், நெருப்பு, காற்று, வானம், சூரியன், சந்திரன், ஆத்மா என்ற எட்டு வடிவமாகவும் ஒருசேர விளங்குவது அஷ்டமூர்த்தி எனப்படும். எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்ட, ஒன்றான பரமசிவம் இவ்வாறு எல்லாமாகவும் விளங்குவதை

ஏகன் அநேகன் இறைவன்
மண் நீர் தீ வெளி கால் வரு பூதங்கள் ஆகி
மற்றும் பெண்ணோடு ஆண் அலியாய்ப்
பிறவா உரு ஆனவனே
ஒருவனுமே பலவாகி நின்றவா
அட்டமூர்த்தி அண்ணாமலை

என்று தெய்வீகத் திருவாசகமும் தேவாரமும் காட்டுகின்றன. இவ்வாறு பரமசிவம் எல்லாமாக விளங்குவதாலேயே எல்லாம் சிவமயம் அதாவது சர்வம் சிவமயம் என்று கூறப்பட்டது. இவ்வாறு பரமசிவமானது எல்லாவற்றிலிருந்து வேறுபட்டும் அதேசமயம் எல்லாமாகவும் விளங்குவதால் இன்னது என்று ஒன்றில் அடக்கிக் கூற முடியாதவாறு கடவுள் நிலையில் இருப்பதை, சதா சிவமாகவே விளங்குவதை

''பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கு ஒளி
சேர்விண்ணாகி
மண்ணாகி இத்தனையும் வேறாகி''

''எல்லா உயிருமாய்த் தழைத்துப் பிழைத்து
அவை அல்லையாய் நிற்கும்''


''ஆண் பெண் அலி ஆகாசமாகி ஆரழலாய்
அந்தமாய் அப்பால் நின்ற''

என்ற தெய்வீகத் திருவாசக மந்திரங்கள் அற்புதமாய்க் காட்டுகின்றன. எல்லாவற்றிலிருந்து வேறுபட்டும் எல்லாமாகவும் விளங்கும் கடவுள் எல்லாவற்றுடனும் விளங்குகின்றது. பூவிலே வாசனை போலவும் கண்ணிலே மணி போலவும், விறகிலே நெருப்பு போலவும் உடலிலே உயிர் போலவும் பாலிலே நெய் போலவும் பரமசிவம் எல்லாவற்றுடனும் உள்ளது. இவ்வாறு எல்லாவற்றையும் கடந்து உள்ள பரமசிவம் எல்லாவற்றுடனும் சேர்ந்து இருந்து இன்னது என்று வரையறுத்துக் கூற முடியாத கடவுள் நிலையில் திகழ்வதை அருளாளர்கள் நமக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றனர்.

*(தொடரும்)*

★ ★ ★





குன்றத்தூர் அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோயிலில் மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்கள் 9.9.2002 அன்று முடிகாணிக்கை மண்டபத்தைத் திறந்து வைத்தார்கள். திருக்கோயில் செயல் அலுவலர் திருமிகு பி.ஆர். ராஜ்மோகன் எம்.ஏ., எம்ஃபில் அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.





சென்னை அருள்மிகு காளிகாம்பாள் திருக்கோயிலில் பேரறிஞர் அண்ணா பிறந்தநாள் (15-09-2002) முதல் ''அன்னதானத் திட்டம்'' மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் திருமிகு பி.சி. இராமசாமி அவர்களால் தொடங்கி வைக்கப் பெற்றது. மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் திருமிகு செம்மலை அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் திருமிகு பி.கே. சேகர்பாபு அவர்களும் இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு எம்.ஏ. கௌரிசங்கர் இ.ஆ.ப. மற்றும் சென்னை இணை ஆணையாளர் திருமிகு கோ. பக்கிரிசாமி பிஎஸ்.சி. பிஎல். அவர்களும் இவ்விழாவில் பங்குகொண்டு சிறப்பித்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.